Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 03 (19 07 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 151

## ஆஸ்பத்திரி காவலர்கள் நிரந்தர வேலை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் காவலாளிகள் நிரந்தரமாகச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார்கள். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் 30-05-91 கடிதம் இல. என். பி. ஓ. 102/90 படி உங்கள் காவலாளி சேவை ஒழிக்கப்படுகிறது என்ற வாசகம் அடங்கிய கடிதங்கள் காவலாளிகளுக்கு நேற்று (8ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையின் குண்டுவீச்சின் மத்தியிலும்

# இராணுவம் மீதான புலிகளின் தாக்குதல் தீவிரமாகியுள்ளது

### இரு தினங்களில் 24 தமிழர் கிராமங்களில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடன் சேர்ந்து ரெலோவினரும் அப்பாவித் தமிழ் மக்களைக் கைது செய்து வருகின்றனர். கடந்த பதினோராம் திகதி மட்டக்களப்பிலுள்ள செட்டிபாளையம் என்ற இடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் ரெலோவினரும் சேர்ந்து கிராமத்தைச் சுற்றி வளைத்து ஆண், பெண் பேதமின்றிப் பதினொரு பேரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர், நேற்றைய தினமும் மேலும் பதின்மூன்று பேரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

### செய்தியாளர் மாநாட்டில் சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்களுடன் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றபோதும் தொடர்ந்தும் புலிகள் கடும் தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்று நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் அவர் இதுவரை ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற மோதலில் 53 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 200 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், புலிகள் ஆனையிறவை விட்டு அகலும் வரையிலும் அப்பகுதியில் விமானத் தாக்குதல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

அங்கு காணப்படுகின்ற அழிப்பதற்காகவே துருப்புக்கள் இறக்கிவிடப்பட்டுள்ளனர். அதைத்தான் அவர்கள் செய்கின்றார்கள் என (8 ஆம் பக்கம் பார்க்க)

### முறியடிப்பது மட்டுமல்ல; புலிகளை அழிப்பதே நோக்கு

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இரு உயர் இராணுவ அதிகாரியினர் உட்பட பத்தொன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பெருந்தொகையான இராணுவத்தி (8 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லையில் இராணுவம் மீது புலிகள் கடும் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமின் காவலரணில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமின் சில வர்த்தை காவலரணில் இருந்து பல இராணுவச்சிப்பாய்கள் வெளியேறி சுமார் 100 யார் வரையில் முன்னேறியபோது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் தாக்கு (8 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு; தொடர்ந்தும் கடும் மோதல்

(இயக்கச்சி)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் ஐந்தாவது நாளாக நேற்றும் கடும் மோதல்கள் இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் இராணுவத்தரப்பில் பலர் இறந்தும், பலர் காயப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மோதல் நடந்த சில பகுதியில் மிகக் குறுகிய தூரத்தில் இருந்து இருபகுதியினரும் மோதிக் கொண்டதாகவும் பலத்த துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

மேலும் பலத்த விமான குண்டுவீச்சும் பீரங்கித் தாக்குதலும் இடம்பெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று விமானக் குண்டு (8 ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதிக்கு உணவனுப்ப கூட்டுப்படை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும் வரை உணவுக் கப்பல்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்க கூட்டுப்படை தலைமைச் செயலகம் மறுத்துள்ளது.

உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறைக்கு வந்த கப்பலும் ஊரடங்கு காரணமாகத் திருக்கோணமலைக்குத் திருப்பப்பட்டது தெரிந்ததே.

இக்கப்பலை மீளவும் வடபகுதிக்குக் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பலனளிக்க (8 ஆம் பக்கம் பார்க்க)

### தென்னந்தோப்பு ஒன்று எரிந்து நாசமாகியது

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களினால் அப்பகுதியில் தென்னந்தோப்பு ஒன்று முற்றாக எரிந்து சாம்பராகியது அருகிலிருந்த பல வீடுகள், கடைகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

கடந்த 14 ஆம் திகதி கடல் மார்க்கமாக வெற்றிலைக்கேணிப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது தெரிந்ததே. இதன் போது (8 ஆம் பக்கம் பார்க்க)

### பதிவு செய்வதற்கான கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நிரந்தர வதிவிடமற்றோர் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும் கால எல்லை வரும் 23 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ரணதுங்கா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் எம். (8 ஆம் பக்கம் பார்க்க)

### விசித்திரனுக்கு மக்கள் அஞ்சலி

(கொடிகாமம்)

ஆனையிறவு இராணுவ முகாமின் 8ஆம் நாள் தாக்குதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை விசித்திரனின் (கொடிகாமம்) புகழுடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பி. பகல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது பின்பு அங்கு வி. பு. ம. முன்னணியின் பிரமுகரின் அஞ்சலியுரையுடன் முடிவுற்று கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (86)

### சிவராஜா, சுபா பற்றிய மேலும் புதிய புகைப்படங்கள்

(சென்னை)

ராஜீவ் படுகொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் முக்கிய குற்றவாளிகளான ஒற்றைக்கண் சிவராஜன் மற்றும் சுபா என்ற பெண்ணின் வேறு சில மாறு வேடங்களிலான புகைப் படங்களைச் சிறப்புப் புலனாய்வுக் குழு நேற்று வெளியிட்டுள்ளது. அவர்கள் மாறு வேடம் தரித்துத் தப்பித்துச் செல்லும் வாய்ப்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுவதால் சிவராஜனின் ஏழு புதிய புகைப்படங் (8 ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர்க்கு வேலணையில் மக்கள் அஞ்சலி

(வேலணை)

ஆனையிறவில் இடம்பெற்று வரும் விடுதலைப்போராட்டத்தில் வீர மரணத்தைத்தழுவிக்கொண்ட சரம்பனைச்சேர்ந்த டயஸ் யாஸ்ரின் றோய் பபிரியன்) நெடுந்தீவைச் சேர்ந்த கட்டப் பொமன் என்று அழைக்கப்படுபவருமான இரு போராளிகளினது பூதவுடல்கள் மண்கும்பானிலுள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும், வேலணை துறையூர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வாசிஸ்னம்பரம்

### வைத்திய சேவை

மூசம்பரு, பாலுண்ணி, பித்தவெடிப்பு தலைமுடிவளரவும், தலைமயிர்நரைமாறவும் தேமல், மர்ம சர்ம ரோகம் போன்ற நீடித்த வியாதிகளுக்கு சிகிச்சை பெற்று சுகத்துடன் இன்ப வாழ்வு அமைய ஆலோசனை மூலம் சிகிச்சை வேளாங்கண்ணி வைத்திய சாலை, டாக்டர் எம். கருணாகரன் 614 மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(R/1555)

---

### விளக்கெரிக்க வேப்பெண்ணெய்

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கச் சிறந்தது பயிர் காப்புக்கு உகந்த பூச்சி பீடை கொல்லி போத்தல் ரூபா 90/- அரைப்போத்தல் ரூபா 45/- (போத்தலுடன்) 'மில்க்வைற்' யாழ்ப்பாணம்.

(B-2822)

---

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. 'மில்க்வைற்' யாழ்ப்பாணம்.

(B-2823)

---

### மில்க்வைற் சலவைத்தூள்

ஒன்றிற்கு மூன்று அடங்கிய மில்க்வைற் சலவைத்தூள் கிடைத்திடும் அதிக நுரை கொடுத்திடும் அதிக சலவை தந்திடும் அதிக சிக்கனம் 50 கிராம் பக்கற் ரூபா 6/- மட்டுமே. 100 வெற்று உறைகள் தந்து அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பெறுங்கள்.

(B-2808)

---

### சோதிடம்

08-08-91 இல் விண்ணில் வியாழமாற்றம் பண்ணில் உங்கள் யோகபலன் எப்படி என்று சிந்திக்கும் நேரத்தில் சந்திக்கப் பாரதி சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(R/ 1559)

---

### அதிஷ்டம் அழைக்கிறது

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்வி மந்தம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்ற பல துரதிஷ்டங்களை நீக்கி அதிஷ்டமாக வாழ சாதகத்துடன் நேரில் வரவும்: ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 146 பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி, நல்லூர்.

(R/1560)

---

## வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

(மண்டூரில்)

மறைந்த வீரவேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும் ஆனையிறவு முகாமை வென்றெடுப்பதற்காக போராளிகளின் கரங்களுக்கு வலுவூட்ட வேண்டியும் மண்டைதீவு கண்டுப் புளியடி வீரபத்திரர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக் கிழமை விசேட யோகக் விழா நடைபெறும்.

இதே நேரம் மண்டூரில் வேரக்கேணி கந்தசாமி ஆலயத்திலும் வீரத் தழும்பினை தழுவிக்கொண்ட வீரவேங்கைகள் சுகம்பெற வேண்டியும், களத்தில் நின்று போராடும் வேங்கைகளுக்கு ஆத்மபலம் வேண்டியும் இன்று காலை 9-00 மணிக்கு விசேட பிரார்த்தனை நடைபெற உள்ளது. கூட்டுப்பிரார்த்தனை போர்க்கால கருத்துரைகளும் இடம்பெற உள்ளன.

இதேபோலவே வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் விடுதலைப் புலிகளின் போராட்டம் வெற்றி பெற திருவருள் வேண்டி 27, 28 ஆம் திகதிகளில் பெருஞ்சாந்தி நடைபெற உள்ளது.

---

## மாதகல் கடற்பரப்பில் கடற்படை அடாவடித்தனம்

(மாதகல்)

மாதகல் பகுதியில் அழ்கடல் மீன்பிடித் தொழில் கைவிடப்பட்டுள்ளது. கடலில் கடற்படையினர் நடமாட்டம் அதிகரித்துள்ளது தொழிலுக்குச் செல்லும் மீனவர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

இதேவேளை காரைநகர் கீரிமலைப் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளதால் மாதகலில் மாத்திரம் கட்டுமரத்தில் பகல் வேளை மீன்பிடித்தொழில் கரையோரங்களில் நடைபெறுகின்றது.

(45)

## ஒக். 6இல் ஆசிரியருக்கு புதிய சம்பள முறை

சர்வதேச ஆசிரிய தினத்தை முன்னிட்டு வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி ஆசிரியர்களுக்கான புதிய சம்பள முறையை ஆரம்பிக்க இருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் 1,80,000 ஆசிரியர்கள் நன்மையடைவார்கள் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

---

## கடனடிப்படையில் மீன்பிடி உபகரணங்கள்

(கொழும்புத்துறை)

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் அபிவிருத்தி புனர் வாழ்வுக்கழகத்தினரால் மீன்பிடி உபகரணங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்கள் இருபாலை, பலாலி, கொழும்புத்துறை, மயிலிட்டி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து வந்து வடமராட்சி கிழக்கில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கே வழங்கப் பட்டுள்ளன.

இரண்டு குடும்பங்களுக்குப் பத்தாயிரம் ரூபா என்ற அடிப்படையிலேயே மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏழாயிரம் ரூபா பெறுமதி மிக்க மீன்பிடி வலை உபகரணங்களும் மீதி மூவாயிரம் ரூபா கட்டுமரம் வாங்குவதற்கு பணமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

மாதம் தோறும் 250 ரூபா வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற கடன் அடிப்படையிலேயே இக்கொடுப்பனவுகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(24)

## ஒன்று கூடல்

(தெல்லிப்பழை)

கவிஞர் செ. கதிரேசர் பிள்ளை நினைவு நாளை ஒட்டி கலை இலக்கிய களம் 33 ஆவது ஒன்று கூடல் நாளை சனி கிழமை காலை 9-00 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற உள்ளது.

---

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை நல்லையா

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நல்லையா அவர்கள் நேற்று காலமானார். இவர் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், நந்தரூபன், புஸ்பராணி, நிசாந்தரூபன், நாகரூபிணி, நிவேதாரூபிணி, நர்மதா, ஞானரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை கள் நாளை தண்ணீரூற்று இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தண்ணீரூற்று
முல்லைத்தீவு
(B / 2827)

தகவல்; சரஸ்வதிதேவி
(மனைவி)

### சின்னத்துரை இராமுப்பிள்ளை

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் சின்னத்துரை இராமுப்பிள்ளை அவர்கள் 18-07-91 இல் காலமானார். இவர் செல்வமான அற்புதநாதன் விநயகர் திரவியம், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி பவளை மற்செல்வி, ஆகியோரின் அன்புக்கணவரும் விஜயலட்சுமி, விஜயகுமாரி, லலிதகுமாரி, சசிகுமாரி, (அவுஸ்திரேலியா) திருமால்மருகன் (சுவிஸ் ஸ்ரீ முருகன் (ஜேர்மனி) நாகலோஜினி (சுவிஸ்) திருநாவுக்கரசன் (மாவீரர் ஜெமினி) ஆகியோரின் அருமைத் தந்தையும் மகாதேவா (வர்த்தகர்) சிவசம்பு (டுபாய்) சிவபாலன் (யாழ். உள்ளூராட்சித் திணைக்களம்), ஜெயமோகன் (அவுஸ்ரேலியா), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி ரத்தினம்மா, காலஞ்சென்ற பாலசிங்கம், நடராசா (வர்த்தகர்), நவரத்தினம் (வர்த்தகர்) இராசலிங்கம் (மலேசியா), திருமதி கமலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், திருமதி சோமன் (கச்சேரி முல்லைத்தீவு), மோகனராஜ் (டென்மார்க்) விஜயமாலா, விஜயராஜ், சிவகுமார், சிவாகரன், சிவநாதன், சிவராஜ், சிவரஞ்சன், சர்வேஸ்வரன், சபேசன், சாரங்கன், சிவசாதி (கச்சேரி. முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புப் பேரனும், பிரதீபாவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-7-91 இன்று காலை 10-00 மணிக்கு கோண்டாவில் கிழக்கு செல்வநாயகம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(R / 1562)

தகவல்
K. S. செல்வேன்
(பேரமகன்)

---

## வீர அஞ்சலி

அளவெட்டி பெத்தாவளைச் சேர்ந்த
சின்னத்துரை இராசேஸ்வரி தம்பதிகளின்
புதல்வர்கள்

சர்வகுமார் வராகன் ஆனையிறவு மோதலிலும்
சபேசன் ரமேஷ் மணலாறு மோதலிலும்

வீரமரணமடைந்துள்ளார்கள்
இவ்விரு வீரவேங்கைகளுக்கும்
எமது வீர அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்

அளவெட்டி மக்கள்,
சிற்றுாவையினர்.

(R-1561)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1991-07-19

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய

★ ஆ. தெய்வேந்திரன் (சம்மாந்துறை)

★ சதாசிவம் சண்முகராசா (சம்மாந்துறை)

அம்பாறை தங்கவேலாயுதபுரத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டெரிக்கப்பட்ட 10 தமிழ் விவசாயிகள்

1987ஆம் ஆண்டு பெரிய புளியங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

மதி (இராசதுரை ஜெயபாலன் - பாலைநகுளம்)

சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ஜோதிரவி (அருமைத்துரை திருமாணந்தம் - தண்ணீரூற்று)

திருக்கோணமலை பன்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் சுட்டுக் கொல்லப்பட்டு மரத்தில் தொங்கவிட்டு எரிக்கப்பட்ட மூன்று வயதுக்குழந்தையுட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு காரைநகரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட

தாடி (பொன்னம்பலம் நாதன் - காரைதீவு)

மதுரங்குளத்தில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

லெப்.கைலன் (வடிவேல் சண்முகநாதன் - கிரான், மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர். தேசவிரோதிகளால சுட்டுக் கொல்லப்பட்டு மானிப்பாய் வங்கிக்கு முன்பாக சடலமாக மீட்கப்பட்ட உடுவில் மல்வத்தையைச் சேர்ந்த தமிழ் இளைஞர்

துன்னாலை கோவிற்கடவைப் பகுதியில் இந்தியப் படையினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

1990ஆம் ஆண்டு குறிஞ்சாத்தீவில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய

டெஸ்மன் (கணபதிப்பிள்ளை தணிகாசலம் - மூதூர்)

கீர்த்தி (பசுபதி சிறீதரன் - திருவையாறு)

மேகன் (சண்முகம் மனோகரன் - குமரபுரம், பரந்தன்)

லெப்.துஷ்யந்தன் (சி. பார்த்தீபன் - பருத்தித்துறை)

குகன் (சுப்பையா செல்வேஸ்வரன் - சரவெட்டித்திடல், புளியம்பொக்கணை)

லெப்.சௌந்தலன் (சின்னையா நாகராசா - தர்மபுரம்)

மட்டக்களப்பு வெல்லாவெளி முகாமில் இருந்து தும்பன்கேணி நோக்கி புறப்பட்ட சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

சிவபாரதி (வேல்முருகு நாகராசா - மகிழவெட்டுவான்)

திருப்பழுகாமம், கோவில் போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, கற்சேனை ஆகிய பகுதிகளில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 35 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**


✗ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2824)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



"மனித குலத்திற்கு பணி யாற்றுவதற்கென்று ஓர் இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்து எம்மை அதில் உறுதிசெய்து கொள்வோமேயானால், அதன் பின்பு எப்பெரும் பளுக்களினாலும் இடர்களினாலும் எம்மை உசுப்பவோ அன்றித் தடுத்து நிறுத்திடவோ முடியாது."

— மார்க்ஸ்

## தளிர்கள் இரும்பைச் சுமக்கும்!



இதோ—
பாருங்கள்!
இருபச்சிளம் பறவைகள்
வழிந்து போன
வாழ்க்கை நினைவுகளை
உதறிவிட்டு
நீருக்குள்
நீச்சலடிக்கத் துடிக்கின்றன!
கண்களில் கசியும்
கண்ணீரை
சேற்றுத் தண்ணீர்
கழுவுகிறதோ!
நீர் சுமந்து
தளதளக்கும்
நீண்ட குளங்களில்
தாமரைப் பூவை
பறிக்கவேண்டிய
கரங்கள் —
வெறும் காற்றை
வெப்பத்துடன் ஏந்துகின்றன!
அகதிகளாக்கியவன்
அரியாசனத்தில்
அமர்ந்திருக்க-
அல்லிகள்
நெருப்பையல்லவா
இருப்பிடமாக்கிக் கொண்டன!
இது—
சாஸ்வதமானதல்ல-
எங்கள்-
தளிர்களின்
நெஞ்சங்கள்
இரும்பைச் சுமக்க-
எழுந்து வரும்!
எங்கள் தமிழீழம்
இளம் பிஞ்சுகளின்
புன்சிரிப்பால்-
நிச்சயம் ஒளிர்விடும்!

● வவுனியா திலீபன்




"இவளைத் தெரியுமே. இவதான் சுகி; கிறேசியின்ர மனிசி" சுகியை இவ்வாறு அந்தப் பெண் போராளி அறிமுகப்படுத்தியதும் சுகியை நிமிர்ந்து பார்த்தேன். சிரிப்பை மறந்துபோன அந்த முகம் அதை வரவழைக்க முயன்று தோற்றுப்போய் நின்றது. ஆனால் அதில் உறுதி என்பது மட்டும் குலையாது நிற்பதை அவதானிக்க முடிந்தது.

கிறேசியின் 90ஆம் நாள் நினைவஞ்சலிக்காக தான் எழுதிக் கொண்டுவந்த விஷயத்தை சுகி என்னிடம் தந்து 'நாளைக்கு இத ஈழநாதத்தில போடவேணும்' என்று சொன்னதும் அதைப் படிக்கத் தொடங்கினேன். 'அன்பு வாழ்க்கையில் ஒரு வருடம் கூடக் காத்திருக்க விடவில்லையே இத்துட்டர்கள்' என்ற அந்த ஒரு வரிக்குள் மனதில் உள்ளவை அப்படியே கொட்டப்பட்டிருந்தன. "செய்வோம் அல்லது இப்புனிதமான மண்ணில் செத்து மடிவோம் என்ற உங்கள் வார்த்தை மறையவில்லை. மறைக்கப்படவுமில்லை' என்ற வரிகளுக்குள் ஒரு வருடத்திற்கும் குறைவான அந்த வாழ்க்கைக் காலத்தினுள் அந்தத் தம்பதிகள் எப்படியான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர் என்பதை உணரமுடிந்தது.

'கிறேசியின்ர குணஇயல்புகளைப் பற்றிச் சொல்லுங்கோவன்' என்று கேட்டதும் சிறிதுநேர மௌனத்துக்குப் பின் சுகி சொல்லத்தொடங்கினார்.

'90ஆம் ஆண்டு அஞ்சாம் மாசம் இருபத்தைஞ்சாம் திகதி எங்கட கலியாணம் நடந்தது. கலியாணம் முடிஞ்சவுடன ஒரு மாசம் எங்களுக்கு லீவு கிடைச்சது; அதுக்கிடயில சண்டை துடங்கிவிட்டுது. அவர் மண்டைதீவுக்குப் போய் கொண்டுபோயிட்டார். நான் ட்றெயினிங் காம்புக்குப் போயிட்டன்,'



லெப். கேணல்

### கிறேசி

வாழ்வின் ஆரம்பத்திலேயே இந்த நிலையென்றால் இந்த மண்ணின் தேவை எப்படியிருக்கின்றது என்பதை விளக்கவேறு வார்த்தைகள் தேவையில்லை. இந்தளவுக்கு உடனே இயல்பாக போர்க்களத்துக்கும், பயிற்சி முகாமுக்கும் போக முடிகின்றதென்றால் அது தான் பிரபாகரனின் வளர்ப்பு முறை. புடம்போட்டு எடுக்கப்படும் போராளிகளை உலகின் எந்த சக்தியால் அசைத்து விட முடியும்?

'அப்ப எல்லாம் நாங்கள் சந்திச்சது குறைவு. பத்து நாளைக்கொருக்காவோ இரண்டு கிழமைக்கொருக்காவோதான் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைச்சது. அவர் மண்டைதீவில நடந்த சண்டையில காயப்பட்டார்; காயத்தால அவர் துடிச்சதை விட அந்தச் சண்டையில இவ்வளவு போராளிகளை இழந்திட்டமே எண்ட வேதனை தான் அவருக்கு அதிகமாக இருந்தது. உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார். காயமும் கொஞ்சம் கொஞ்சமா மாறிச்சுது. இவர் தன்னைச் சண்டைக்கு விடச்சொல்லி மாத்தயாண்ணயிட்ட நச்சரிச்சுக் கொண்டிருந்தார். கடைசியில சண்டைக்குப்போக அனுமதிகிடைச்சுது. அப்ப திருக்கோணமலைக்கும் போறதாத்தான் இருந்தார். அப்ப ஒரு கசெற்றில தான் கதைச்சதை எனக்கு அனுப்பியிருந்தார். "நான் திரும்ப வரவில்லையெண்டா நீங்கள் இயக்கத்தில இருந்து கடைசி வரைக்கும் போராடித்தான் சாவீங்கள் எண்டு நம்புறன்; எங்கட இயக்கத்துக்கு விசுவாசமா; தலைவரில - மாத்தயாண்ணயில - இயக்கத்தில நம்பிக்கைக்க இயங்க வேணும், இருக்கும் வரை இயக்கத்தில இருந்தே சாக வேணும்" எண்டெல்லாம் அந்தக் கசெற்றில கதைச்சிருந்தார்.

தொடர்ச்சியாக சுகி சொல்லிக் கொண்டிருக்கும் போது 'இப்படியும் ஒரு தம்பதிகளா' என்று வியந்து கொண்டிருந்தேன். ஒவ்வொரு கணவனும், மனைவியும் தமது எதிர்காலத்தைப்பற்றி எப்படியெல்லாம் திட்டமிடுவர்?, எமக்கு ஒரு வீடு, சேமிப்பு, பிற்காலத்தில எப்படியிருக்கலாம்?, எந்த நாட்டுக்குப் போனா கூட உழைக்கலாம்?, என்னவேலை செய்தா கூட உழைக்கலாம்? என்றெல்லாம் திட்டமிடும் போது இதே சமுதாயத்துக்குள் இருந்து "நான் திரும்ப வரவில்லயெண்டா..." என்று இயக்கத்தின் நலனைப் பற்றி சிந்திக்கும், எமக்கு ஒரு நாடு வேண்டும் என்று ஆசைப்படும் இவர்கள். வித்தியாசமானவர்கள் தான்.

சுகி சொல்லிக்கொண்டிருந்தார். 'அடிக்கடி அவர் சொல்லிக்கொண்டிருப்பார்.' கலியாணம் முடிச்சிட்டமெண்டு நாங்கள் சண்டையில பின்னிற்கக் கூடாது; சாகவேணுமெண்டா சாகவேணும்தான். நீங்கள் அடிக்கடி அண்ணாக்களைக்கண்டு அவை சொல்லுறதைக் கேக்கவேணும். இந்த சமுதாயத்துக்கு நாங்கள் முன் மாதிரியா வாழ்ந்து காட்டவேணும். எங்களுக்கு ஒரு குழந்தை இருந்தாலும் நாங்கள் செத்தா இயக்கம் அந்தக் குழந்தையை வளர்க்கும்; பிள்ளை பிறந்தாக்கூட சண்டை வருகிபோது சண்டை பிடிக்கவேணும். அடிக்கடி அவர் சொல்லுறது 'செய்வோம் அல்லது செத்து மடிவோம்' எண்ட வசனத்தைத்தான்.

சொல்லிலும் செயலிலும் இயக்கத்தின் நலனையே சிந்திக்கும் கிறேசியின் குடும்ப வாழ்க்கை பற்றிக் கேட்ட போது 'எந்த விஷயத்திலயும் நீங்கள்முடிவெடுத்துச்செய்தா சரிதான் எண்டு எல்லாத்தையும் என்னுடைய முடிவிலேயே விட்டுவிடுவார்' என்று பதிலளித்தார் சுகி. அதுசரி 'நீங்கள்' என்றுதானா கிறேசி கதைப்பான்? — அப்படியெல்லாம் வீட்டில் கதைத்துப் பழக்கமில்லாத எனது கேள்வி, 'நீ எண்டோ அடியே எண்டோ ஒரு வார்த்தையில்ல' என்றார் சுகி.

கிறேசியின்ர தகப்பனாரை ஏன் சுட்டவங்கள் ஈ. பி. ஆர். எல். எவ்? என்று கேட்டதற்கு 'இவரில உள்ள ஆத்திரத்தில தான் தகப்பனாரைச் சுட்டவங்கள். வேற ஒருகாரணமுமில்லை. செத்த வீட்டுக்கு இவர் வருவார் எண்டுகூட எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாங்கள்' என்றார்.

சண்டையைப் பற்றிச் சொல்லுங்கோவன் என்று கேட்டதற்கு இயக்கத்தில இருந்த வரைக்கும் தொடர்ச்சியாச் சண்டை பிடிச்சுக் கொண்டு தான் இருந்தவர். அதுக்கு கணக்கு வழக்கில்ல. கிளிநொச்சியில நடந்த எல்லாச்சண்டையிலயும்பங்குபற்றினவர் எண்டு நான் கேள்விப்பட்டனான். நாங்கள் கலியாணம் முடிக்க முதல் 87ஆம் ஆண்டு நெல்லியடித்தாக்குதலில பங்குபற்றினவர்கள் இவர் பிறகு கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளரா இருந்தவர் என்று கூறினார்.

கிறேசியின்ரகடைசிநாளைப் பற்றிச் சொல்லுங்கோவன் என்று கேட்டதற்கு 'பரப்புக்கடந்தானில் நடந்த சண்டையில தான் அவர் வீரமரணம் எய்தினவர். அப்ப நான் ட்றெயினிங் காம்பில இருந்தனான். அவர் சாகிறபோது நான் ரெண்டு மாசம்... இது அவருக்கும் தெரியும்.... இப்ப அஞ்சு மாசம்... சரளமாகக் கதைத்துக் கொண்டிருந்தவாய் மௌனித்தது. கைப்பையிலிருந்த கைக்குட்டையை சுகியின் கைதேடியது. நான் எழுந்து சென்றேன்.

'சரிவோட்டுவாறன்-விடைபெற்றுக் கொண்டார் சுகி - கண்கள் சிவந்திருந்தன, அதில் கிறேசியின் குருதியைக் கண்டேன்.

- தயாளன்

### நோய் பரிசோதனை இயந்திர மனிதன்

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி 30 மில்லியன் எயிட்ஸ் நோய் பரிசோதனைகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பரிசோதனை மிகவும் செலவுள்ளதாகவும் பரிசோதனையில் ஈடுபடும் தொழில்நுட்பவியலாளருக்கு சில ஆபத்துக்களை உண்டாக்குவதாகவும் இருக்கிறது. இவற்றைக் குறைக்கும் முகமாக சிங்கப்பூர் நிறுவனமொன்று ஓர் புதிய 'ரோபோ' வைத்தயாரித்துள்ளது. இதன் மூலம் செலவு 60 வீதம் குறைக்கப்பட்டு மனித ஆபத்தும் தவிர்க்கப்பட்டுள்ளது.

# ஆணிவேர்

### சிறுகதை

“உங்கள் கிராமங்களில் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்து வருவதாகவும், வீடுகளில் உணவுப் பொருட்களை பதுக்கி வருவதாகவும் எமக்கு தகவல் கிடைத்துள்ளது; அவர்கள் எமது தாக்குதலில் பலவீனமடைந்திருப்பதால் மக்களாகிய உங்கள்மீது தாக்குதல் நடாத்திவிட்டு அதனை இராணுவத்தின் மீது சுமத்தி உலக நாடுகளை எமக்கெதிராக திருப்பிவிட நினைக்கிறார்கள்; புலிகளை அழித்து உங்களை காக்க வேண்டியுள்ளதால் நீங்கள் அனைவரும் உங்கள் கிராமங்களைவிட்டு வெளியேறி வவுனியா, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு செல்லுங்கள்” என எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களை இலங்கை வான்படைக் ஹெலிகொப்டரொன்று மணலாற்று கிராமங்களில் வீசியது.

மக்களிடையே மிகவேகமாக பரவிய இத்துண்டுகள் குண்டுகளைவிட அதிகமான பரபரப்பை ஏற்படுத்தியது. 'வல்வெட்டித்துறையில் இவ்வாறு துண்டுபோட்ட பின்னர்தான் விமானங்கள் குண்டுவீசி வீடுகளை அழித்தன; ஓமந்தையிலும் துண்டு போட்டுத்தான் குண்டு போட்டார்கள்' என்ற புரளிகளையெல்லாம் பலர் கிளப்பினர். வதந்தி பரப்புவோர்க்கு இச்செய்தி அவல் கிடைத்தமாதிரி அமைந்தது.

28-5-91 ஞாயிற்றுக்கிழமை சித்திராபௌர்ணமியாதலால் தன் முழுஉருவம் காட்டி நிலவுமகள் கிழக்கே தலைநீட்டிக் கொண்டிருந்தாள். துண்டு போட்டதால்ஏற்பட்ட குழப்ப நிலையை அமைதிப்படுத்த நிலவு உலாவந்தாலும் வீதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தலையிலும் கைகளிலும் மூட்டை முடிச்சுக்களை சுமந்தபடி மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சித்திரா பௌர்ணமியோடு கிராமத்தின் எல்லையை கடந்துவிட வேண்டுமென்ற அவசரம் அவர்களின் நடையில் தெரிந்தது. வசதி படைத்தவர்கள் தம் உடைமைகளை வாகனங்களில் ஏற்றிப் பறந்தனர். வீடு தலைவிரும்பிய மக்கள் கூட்டமொன்று அவர்கள் செல்வதைத் தடுக்க முயன்றுகொண்டிருந்தது. ஆனால் அண்டின் வலிமை வென்றது.

சித்திரைத்திங்கள் குளிர்பரப்பிய மண்ணில் கோடையின் அகோரத்தைக் காட்ட கதிரவன் உதயமாகினான். மணலாற்றுக் கிராமங்களின் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. மயான அமைதியொன்று அங்கு நிலவியது. 21 - 12 - 84 இல் இத்தகையதொரு துண்டினால் வெளியேறி தமது நிலங்களில் பெரும் பகுதியை சிங்களமக்களிடம் பறிகொடுத்ததை உணர்ந்த மக்கள் சிலர் மட்டும் அக்கிராமங்களில் நடமாடினர். அதுவும் துப்பாக்கி ஏந்திய துணைப்படை வீரர்களின் குடும்பங்கள்; ஒரு சிங்கள சிப்பாயின் பாதம்கூட மண்ணில் பதியவிடக்கூடாது; புலிகள் இருக்கும்வரை அது நடக்காது என்ற உறுதியும் நம்பிக்கையும் அம்மக்களின் மனதில் ஆழமாகப் பாய்ந்திருந்தது.

அதிகாலை அமைதியைப் பிளந்துகொண்டு ஹெலிகொப்டர் இக்கிராமங்களில் பறந்து வட்டமிட்டது. ஹெலிகொப்டரிலிருந்து இராணுவ முகாமொன்றுடன் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருப்பதை மக்கள் தமது வானொலியில் இடைமறித்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். 'மக்கள் வெளியேறிவிட்டார்களா?' என சிங்கள இராணுவமுகாம் அதிகாரி சிங்களத்தில் கேட்க 'உடுப்புகள் வீடுகள் தோறும் காய்கின்றதைப் பார்த்தால் ஒருவருமே வெளியேறவில்லை போல் தெரிகிறது' என்று ஹெலிகொப்டரிலிருந்தவர் சிங்கள மொழியிலே பதில் கொடுத்தார். 'விமானங்களை அனுப்புவோம்' என்று இராணுவ முகாம் அதிகாரி ஹெலிகொப்டருக்கு அறிவிக்க ஹெலிகொப்டரும் சென்று மறைந்தது.

இரு நாட்கள் மணலாற்றுக் கிராமங்களில்பயங்கர அமைதி நிலவியது. உலகெங்கும்தொழிலாளர் தினத்தை கொண்டாட மே - 1ஆம் நாள் விடிந்தது. இலங்கை வானொலி தன் காலைச் செய்தியில் மணலாற்று மக்களுக்கான மேதின செய்தியாக காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை அறிவித்தது. அச்செய்தி சிங்கள மக்களுக்கு மங்களமாக அமைந்தது. கொழும்பு தமிழர்களுக்கும் வாயில் இனிப்புப்போட்டிருந்தார் பிரேமதாசா. தென்னக சினிமா நட்சத்திரப் பாடகர்கள் கலந்து கொள்ளும் இன்னிசை நிகழ்ச்சிகள் கொழும்பில் நடைபெற இருப்பதாகவும் மேதினக் கொண்டாட்டங்கள் பல இடங்களிலும் நடைபெறவிருப்பதாகவும் வானொலி தன் காலைச் செய்தியை ஒலிபரப்பியது.

காலை 7.30 மணியளவில் பாரிய குண்டுவீச்சு விமானங்கள் மேதினக் கொண்டாட்டத்தை மணலாற்றில் ஆரம்பித்தன. கடலிலிருந்து கடற்படைக் கப்பல்கள் பீரங்கிகளை கிராமங்களை நோக்கி வீசத்தொடங்கின. இத்தகைய குண்டுவீச்சு தொடர்ச்சியாக இரு தினங்கள் நடைபெற்றது. குமுளமுனைக் கிராமத்தில் மட்டும் 100கிலோ எடை கொண்ட 98குண்டுகள் வீசப்பட்டன. மணலாற்றின் சின்னஞ்சிறிய கிராமங்கள் இக்குண்டுவீச்சினால் அழிந்து போனது. 'இராணுவத்தை இறக்கப்போகின்றார்கள்' என்று முள்ளியவளைக்கு ஓடிச்சென்ற மக்கள் பேசிக் கொண்டார்கள். “செம்மலையில் கன் போட்டினால் இராணுவத்தை இறக்கி விட்டார்கள்” என்று புதுக்குடியிருப்பில் ஓடிப் போயிருந்த மக்கள் பேசிக் கொண்டார்கள். “கொக்குத்தொடுவாய் இராணுவத்தின் கையில்” என்று இருநாட்களுக்கு முன்னரே விஸ்வமடு போய்ச்சேர்ந்த மக்கள் கூறிக்கொண்டார்கள்.

சுடுகாடாய் மாற்றப்பட்ட மணலாற்றுக் கிராமங்களில் நம்பிக்கையும், உறுதியும் கொண்ட குடும்பங்கள் பல ஓடமறந்து இருந்தன. மண்ணை இழந்துவிடக் கூடாதென்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். இன்னொரு புறம் நிலவுமனிதர்கள் பலர் தம் திருட்டுத் திறமையை காட்டிக் கொண்டிருந்தனர். ஓடினால் 'றேஷன்' கிடைக்கும் என்று ஓடியமக்கள் பலர் சைக்கிள்களில் மிகவேகமாக இயங்கிக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும்மத்தியில்குமுளமுனைக் கிராமத்தில் இரண்டு வீடுகளில் மட்டும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது அடுப்பு புகைந்துகொண்டிருந்தது. யாருக்காக அவை எரிந்து கொண்டிருந்தன?

குமுளமுனைக் கிராமத்துக்குள் நுழைந்த புலிவீரர் அந்த வீட்டின் படலையை மிகவேகமாக திறந்தனர். அங்கு.... - கப்டன் வதனனின் அம்மா தன் இரு குழந்தைகளுடன்... “வாருங்கோ பிள்ளையள். எனக்கு தெரியும் நீங்கள் நிச்சயம் வருவீர்களென்று. இந்த மண்ணில் ஆமியனை இறக்க விடமாட்டீர்களென்ற அசையாத நம்பிக்கை எனக்குண்டு; வாருங்கோ, பசியோடை இருப்பீர்கள்; சாப்பிடுவம்;” என்று முகம்மலர வரவேற்றாள். தட்டொன்றில் பலாப்பழத்தை சுளையாக்கி கொண்டுவந்து கொடுத்தாள் அந்த வீரத் தாய். கலங்காத அந்த வீரர்களின் கண்கள்கூட கலங்கின. என்ன அன்பு; என்ன உறுதி; அந்த ஒருதாயே ஓராயிரம் சக்தியை அவர்களுக்கு கொடுத்தாள்.

“அம்மா அடுத்த வீட்டிலும் அடுப்பு புகைக்கிறதே. யாரது?” என்று அம்மாவிடம் கேட்டார்கள். “வேறு யாரப்பா, வாழ்நாளெல்லாம் கையுழைய உங்களுக்கு சமைத்துப் போட்ட உங்கள் அக்காதான் இன்றும் வங்கருக்குள்ளேயிருந்து நீங்கள் வருவியவென்று சமைக்கின்றா” என்றார் அம்மா. மௌனமாய் இருந்த அந்த வீரர்களின் கண்ணில், நெஞ்சில் இத்தியாகிகள் ஓங்கிநின்றார்கள். மலையே விழுந்தாலும் நிலைகுலையாத உண்மையான ஆதரவாளர்களை, இயக்கத்தின் ஆணிவேர்களை இனம் காண இது அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமல்லவா. ஆணிவேர் அசையாது என்றஉண்மையை உணர்ந்தபோது தம் துப்பாக்கியை முத்தமிட்டுக் கொண்டனர்.

மணலாறு **விஜயன்**

---

## வள்ளுவ வாக்கியம்

### சோம்பல்!

தீமை எனக் காட்டாது பெருந்தீமை விளைவிக்க வல்லது சோம்பல்! ஓய்வு வேறு; செயல் இல்லாமல் சுகம் பெற விரும்பும் சோம்பல் வேறு! இந்த வேறுபாட்டை உணராத மனிதன் வாழ்வில் ஏமாற்றம் அடைகிறான். வேதனையும் பிறரின் ஏளனமும் பின்னர் பரிசாகக் கிடைக்கிறது! அவன் செயற்பட்டிருந்தால்...?

சோம்பலைப் போலப் பிற்போடும் பழக்கமும் பெருங்கேடு தரும் குணமே, செயலைப் பிற்போடுபவன் வெற்றியை நழுவ விடுகிறான், உலகில் பின்தங்கி விடுகிறான் இவை மட்டுமோ? மறதி என இன்னொரு தீங்கும் உண்டு. எண்ணிய செயலையும் பெற்ற அறிவையும் அது களவாடி விடுகிறது, இவற்றுடன் நான்காவது சாபக்கேடு மேலதிக தூக்கம்! இவை ஒவ்வொன்றும் மனிதரைக் கேடென்ற துறைக்கும் கொண்டு செல்லும் ஓடங்கள் போன்றவை. ஆக்கத்தை நோக்குபவர் இந்த ஓடங்களில் ஏற மாட்டார்கள்! கெடுவோரே கேடுகளை அறிந்தும் அவற்றுக்கு இடம் கொடுப்பர்! மனவலிமை உடையோரின் வாழ்வு வேறு. (குறள்6 05)

நாக - பத்மநாதன்.

---



## விடுதலைநாடும் வேங்கைகள்

### கவிதை

இனத்தின் விடுதலைக்காய் ஈழத்தை மீட்கக்
கனத்த களத்திலே காத்திருந்து-சனத்திற்காய்ப்
போராடும் வீரப் புலிகள் தியாகத்தைப்
பாராட்ட வேண்டு பரிந்து.

கன்னித் தமிழீழங் காண வருமிழப்பு
மின்னலென மறைந்து போகுதே--இன்னமுந்தான்
சொன்னபடி ஈழந் தோன்ற வழிகாட்டும்
மன்னனுரை கேட்க மகிழ்ந்து.

முப்படைகள் நின்று முழங்கவெதிர் கொண்
டெம்மைத்
தப்பவைத்துக் காக்கும் தமிழ்ப் புலிகள்
- எப்பொழுதோ
மீட்பார்கள் தாயகத்தை மீட்டுத் தமிழீழம்
நாட்டல் உறுதி நமக்கு.

கோட்டை பிடிக்கக் குறிவைத்து வந்தபடை
ஆட்டங்கண் டோடி அவலமுற -நாட்டினார்
வெற்றிக்கொடியும் விளக்குகளும்வேங்கைகளின்
அற்புதத்தைக் கண்டோம் அதில்.

மாங்குளத்து மோதல் மகத்துவத் தாற்புலிகள்
விங்குபுகழ் உலகில் வீசுதே -ஈங்குதமிழ்
ஈழமினிமலரு மென்ற துணிவோடு
வாழ வகுத்தார் வழி.

வான்படையி னோடு வரிசையாய் முன்னேறித்
தான்வந்து தாக்குந் தரைப்படையை -ஊன்சிதறத்
தாக்கி யிழப்போடு தமோறி மீண்டோடப்
போக்குகிறார் வேங்கைகளைப் போற்று.

அஞ்சாமல் முன்னேறி ஆமிக்காம் புட்புகுந்து
துஞ்சி யவரைத் துகளாக்கும் – விஞ்சுபுகழ்
பூத்த கரும்புலிகள் புரியும்போர் வித்தைகட்கு
ஏத்துவோம் வாரீர் இணைந்து.

விடிவு தமிழீழத் தாயகமே யென்ற
பிடிவாத மேபுலிகள் தாகம் - முடிவு
இனவாதம் பேசி இலங்கை யரசாளுங்
கனவான்க ளீட்ட கறை.

வேறுவிருத்தம்

குண்டுகளைக் குறியின்றி ஏவித் தானே
கொலைசெய்து குவிக்கின்றார் மக்களைத்தான்
தண்டிக்க வகையில்லை என்பதனால்
தடம் புரண்டிடம் பெயர்ந் தோடுகின்றோம்.
அண்டியே விடுதலைப் புலிகளோடு
அவருக்கு நாமுதவியாக நின்று
கொண்டிருந்த தமிழீழப் போரில் வெற்றி
கொள்வதே வழியினி வேறெதுவுமில்லை.

வி. சி. இராசரத்தினம்

# "எங்களை வெல்ல யார் துணிவர்?"

## இதுவேஎஸ்.ஏ.எஸ்ஸின் தாரகமந்திரம்

'விசேட வான் சேவைப் படை'' அல்லது எஸ்.ஏ.எஸ். என்பது பிரித்தானியாவில் இயங்கும் ஒரு இரகசியமான இராணுவமாகும். இதனுடைய உயர்மட்ட அதிகாரிகள், இதிலுள்ள படையினர், இதில் எத்தனைபேர் சேவையிலிருக்கின்றார்கள், இது எந்த இடத்திலிருந்து செயல்படுகிறது என்ற விபரங்களை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. அதி திறமை வாய்ந்த யுத்த இயந்திரமாகப் போற்றப்படுவதற்கு இதனுடைய இரகசிய செயற்பாடே காரணமாயிருக்கின்றது. தோற்கடிக்கப்பட முடியாத இவர்களைப் பற்றிய வதந்திகளும், இவர்களுக்குள்ள திறமைகளும் எப்படி இவர்களுக்குப் புகழை சேர்த்து வலுவூட்டுகின்றனவோ, அதே போல இவர்கள் கையாளும் யுத்த முறையும், அதற்காக இவர்கள் பாவிக்கும் ஆயுதங்களும் இவர்களுக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுக்கின்றன.

1970இல் லண்டன் பால்கொம் வீதிச் சுற்றி வளைப்பில் பொலிசாரைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த ஐரிஷ் குடியரசுப் படையினர் எஸ்.ஏ.எஸ். படை பொலிசாருக்கு உதவியாக வருகின்றது என்பதைக் கேள்வியுற்றதும் சரணடைந்தனர். போக்லண்ட் தீவை ஆர்ஜென்டீனாவிடமிருந்து விடுவிப்பதற்காக பிரித்தானியர் போரில் இறங்கிய போது, பிரித்தானிய படைப்பிரிவுகள் போக்லண்ட் செல்லுமுன்பே எஸ்.ஏ.எஸ். படையினர் விசேட படகுகள் மூலம் அங்கு சென்று கடும் போரிட்டு எதிரிக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தினர். இதில் ஈடுபட்ட இவர்களை, ஆர்ஜென்டீனாப் படையினர் 'மாயப் பிசாசுகள்' என வர்ணித்தனர்.

1980இல் லண்டன் பிறின்செஸ் கேற்றிலுள்ள ஈரானிய தூதரகத்தை பணயமாக வைத்திருந்த ஆறு பயங்கரவாதிகளில் ஐவரை எஸ்.ஏ.எஸ் படையணியினர் அழித்ததைத் தொலைக்காட்சி மூலம் உலக மக்கள் பார்க்க வசதியளித்தபோது, இந்த துணிகரச் செயலைப் பார்த்த பிரித்தானிய மக்களின் உள்ளங்களில் எல்லாம் இவர்கள் நிரந்தரமான இடத்தைப் பிடித்து விட்டார்கள். தூதரகத்தினுள் யன்னலூடாகப் பாயுமுன், தலையிலிருந்து பாதம் வரை கறுத்த உடையும், தலையில் கம்பளித்தலை மூடியும், முகத்தில் முகமூடியும் அணிந்து உறுதியுடனும், பயங்கரமாகவும் இவர்கள் கட்டடத்தின் கூரையில் நின்ற காட்சி, பிரித்தானிய இராணுவத்தினர், ''எஸ்.ஏ.எஸ். படையணியுடன் வீண் வம்புக்குப் போகாதே'' என்று முன்னர் எச்சரித்திருந்தவார்த்தைகளை நினைவுகூர வைத்தது.

''எங்களை வெல்ல யார் துணிவார்?'' என்ற இவர்கள் கோட்பாட்டுக்கேற்ப பயங்கரவாதத்திற்கெதிராகச் செயற்பட்டு மிகவும் புகழ் ஈட்டி வரும் எஸ்.ஏ.எஸ் படையணி இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் உருவாக்கப்பட்டது. மேற்குப் பாலைவனப் போரில் துணிகரச் செயல்களைப் புரிந்தவரும், புதிய இராணுவக் கருத்துக்களைக் கொண்டவரும், இதை உருவாக்கியவருமாகிய லெப்டினன்ட் டேவிட் ஸ்ரேர்லிங் இப்படைப் பிரிவின் முதலாவது தளபதியாகவிருந்தார். இவரது குறிக்கோளுக்கிணங்க, எதிரணியினரின் மத்தியில் ஊடுருவி அவர்கள் தொடர்பு சாதனங்களை அழித்தும், வேறு நாசவேலைகளிலீடுபட்டும், அவர்களுக்குப் பெரும் அழிவையும் தொல்லைகளையும் ஏற்படுத்தும் நோக்குடன் பிரித்தானிய இராணுவத்தினுள் ஒரு அதிரடிப் படைப் பிரிவு அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, அதற்கேற்ற வழிமுறைகளைத் திட்டமிட்டு, 1941இல் ஒரு விரிவான அறிக்கையை லெப்டினன்ட் டேவிட் ஸ்ரேர்லிங் தயாரித்தார்.

மத்திய கிழக்கிலுள்ள பிரித்தானிய இராணுவத் தளபதி ஜெனரல் ஒக்கின்லெக்கைச் சந்தித்து, இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகச் சென்றார். பாலைவனப் போரில் ''றொமலை'' முறியடிக்க முடியாதிருந்த பிரித்தானிய இராணுவம், மற்றவர்களுடைய கருத்துக்களை வரவேற்கும் நிலையிலிருந்த வேளையில் ஸ்ரேர்லிங் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து, அதைச் சமர்ப்பித்த மூன்று நாட்களில் அதைச் செயல்படுத்தும் வாய்ப்பைப் பெற்றார். விசேட விமானப் படைப் பிரிவின் 'ட' பிரிவு என இது அழைக்கப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட பிரிவு ஒன்றிருக்கவில்லை. தற்போது இயங்கி வரும் எஸ்.ஏ.எஸ். படையணியைச் சூழ்ந்துள்ள மர்மங்கள்போல், இல்லாத ஒன்றை இருப்பதாக எதிரியை நம்ப வைப்பதால் ஏற்படும் நன்மைகளைக் கருத்திற்கொண்ட ஒக்கின்லெக், பராதுருப்புக்கள், அனுபவம் வாய்ந்த அதிரடிப் படைவீரர்கள் ஆகியோரின் பெயர்களை இப்படையணியுடன் இணைத்துப் பிரசாரம் செய்தார்.

ஆரம்பத்தில் முந்நூறுக்கும் குறைவான படைவீரர்களைக் கொண்ட ஸ்ரேர்லிங்கினுடைய படையினர் பாலைவனப் போரில் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்டினர். வைத்த வெடிமருந்துகள் வெடிக்கும் முன்னரே யார் கண்ணிலும் படாது மாயமாய் மறைந்துவிடும் ஆற்றல் உடைய இவர்கள், ஜேர்மனியருடைய நூற்றுக்கணக்கான ஆகாய விமானங்களைத் தரையில் வைத்தே அழித்தனர். மிகக் குறைந்த உணவுடன் பலமும் மன உறுதியும் குறையாமல் எந்தச் சூழ்நிலைக்கும், சுவாத்தியத்துக்கும் ஈடுகொடுத்து வனாந்தரத்தில் தூர இடங்களில் அமைந்துள்ள தாங்கிகள், நவீன ஆயுதங்கள், விநியோக நிலையங்கள், எண்ணெய்க் குதங்கள் ஆகியவற்றை மறைந்திருந்து தந்திரமாக தீரத்துடன் இவர்கள் தாக்கி அழித்தனர். இதனால்தான் இன்று எஸ்.ஏ.எஸ் படையில் சேர விரும்பும் ஒவ்வொரு பதினைந்து இராணுவவீரர்களிலும் பதினான்குபேர் தகுதியற்றவர்களாக இருக்கின்றனர்.

### விரைவு

ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பா ஊடாக 1944-45இல் நேசப்படைகள் சென்றபோது நான்கு மடங்காக வளர்ந்துவிட்ட எஸ்.ஏ.எஸ். படையணி கடும் எதிர்ப்புக்களைத் துணிச்சலுடன் சமாளித்துக்கொண்டு அவர்களுக்கு உறுதுணையாகச் சென்று வெற்றியீட்டி பிரித்தானிய இராணுவத்தின் நன்மதிப்பைப் பெற்றது. நேரடிப் போரிலும், வேவு பார்ப்பதிலும்கூட இவர்கள் திறமையாகச் செயல்பட்டார்கள். எதையும் இலகுவில் புரிந்து விடாத ''பீல்ட்மார்ஷல் மொன்கோமரி'' மரபுவழிப் படைபோல உடையும் போர்முறையும் இல்லாத இவர்களுடைய வீரத்தை மெச்சினார். பிரித்தானிய சாதாரண போர்வீரனுக்குள்ள கட்டாய பயிற்சி, விடுதியில் தங்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இவர்களுக்கில்லை. இவர்கள் ஆரம்பத்தில் கையாண்ட செயல்முறையையே இன்னும் கையாண்டு வருகின்றனர். இவர்கள் சோடியாகச் சேர்ந்தே செயற்படுவர். மற்றைய சோடிகளுடன் இணைந்து தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டிய அவசியம் ஏற்படின் பத்து முதல் இருபது பேர் வரை ஒன்றிணைந்து அதை நடத்துவர். இவர்கள் களத்திலிருக்கும்போது இராணுவத்தினர் போன்ற சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில்லை. ஒவ்வொருவரும் மற்றவரை அழைக்கும்பொழுது அவரின் முதற்பெயரைச் சொல்லியே அழைப்பர். சாதாரண மனிதனால் முடியாத பெரும் பணிகளை இவர்கள் ஆற்றவேண்டியிருப்பதால் தளர்த்த முடியாத இராணுவ சட்டங்களை ஸ்டேர்லின் இவர்கள் விடயத்தில் தளர்த்தியிருந்தார்.

ஐரோப்பாவினூடாக முன்னேறிச் சென்ற வேளையில் எஸ்.ஏ.எஸ். படையணி ஒரு பலம் வாய்ந்த மரபு வழியற்ற படையணியாக வளர்ந்திருந்தது. நேசபடைகளின் ஆயுதங்கள் மட்டுமல்ல, எதிரிகளின் ஆயுதங்களையும் கையாள்வதில் இவர்கள் வல்லவரானார்கள். சாதாரண பிரித்தானிய காலாற்படை இராணுவ வீரனுக்கு விளங்காத எதிரியைப் போல் சிந்திக்கும் ஆற்றலை இவர்கள் பெற்றிருந்தனர். ''நாஜி ஜெர்மனிக்கு இவர்கள் ஏற்படுத்திய அழிவை, ஒரு படைத்தலைவர் தனது ஐந்து படைப் பிரிவுகளை இழந்தும் ஏற்படுத்தியிருக்க முடியாது'' என முன்னாளில் எஸ்.ஏ.எஸ். படையணியில் பணியாற்றிய ஒருவர் எழுதியுள்ளார்.

இவர்களது பெரும்பங்களிப்பால் நாஜி ஜெர்மனியையும், ஜப்பானையும் தோற்கடித்த பின்னர், இவர்களைத் தொடர்ந்தும் செயற்படவிடுவதா, இல்லையா என்பது பிரித்தானிய அரசாங்கத்துக்குப் பெரும் பிரச்சினையாகவிருந்தது. இவர்களை ஆதரிப்போர் இவர்கள் மதிக்கப்படவேண்டியவர்களென்றும், குறைகூறுவோர் இவர்கள் சட்டதிட்டங்களுக்கு அமையாது கொள்கைக்காரர் போல் நடப்பவர்கள் என்றும் கூறுகின்றார்கள். இந்த இரு குணாதிசயங்களும் கொண்ட இந்தப் படையின் யுத்தத்தின் பின் இவர்கள் மறைவாகவிருந்து மற்ற நாடுகளின் அரசாங்கங்களைக் கவிழ்க்கச் சதிசெய்தல், உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், இரகசியத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் ஈடுபட்டனர். இப்போதும் இவர்கள் இதையே செய்து வருகின்றனர்.

1945இல் கலைக்கப்பட்ட இப்படையணி, யுத்தத்தின் போது இதில் கடமையாற்றிய அதிகமான வீரர்களை உள்ளடக்கியதாக இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் தரைப்படையாகமாற்றியமைக்கப்பட்டது. 1952இல் இப்படையணி இராணுவமாக அங்கீகரிக்கப்பெற்றிருப்பினும் 1950இலிருந்து 1980வரை இதன் செயற்பாடுகள் யாவும் இரகசியமாகவே இருந்து வந்துள்ளது. சாதாரண போர்வீரன் ஒருவன், பத்திரிகைகள் தன்னைப்பற்றி வீரனென விமர்சிக்கவேண்டுமென்றும், மக்கள் தன்னைப் புகழ்ந்து மதிப்பளிக்கவேண்டுமென்றும் விரும்பும் வேளையில், இவர்களைப் பற்றிய யாவும் இரகசியமாகவே இருக்கும் என்பதை இவர்கள் அறிவார்கள். இது இவர்கள் செய்யும் தொழிலுக்கு இன்றியமையாதது. நாட்டின் நலனுக்காக ஈடுபடும் இவர்களது பணி வெளியே தெரிய நேரிடுகையில் சம்பந்தப்பட்ட பணியில் இவர்கள் ஈடுபடவில்லையென மறுப்பதையே இவர்கள் அரசாங்கம் செய்யும் என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்னர் பிரித்தானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்று வந்தபோதும், எஸ்.ஏ.எஸ். படையணி மலாயா, ஓமான், போர்னியோ, றத்வான், ஏடன், யெமன் ஆகிய நாடுகளில் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடியது. உதாரணமாக, எவரும் உட்புக முடியாத மலாயாக் காடுகளில் மறைந்திருந்த கெரில்லாக்கள் பிரித்தானிய படையினரை காடுகள் ஊடாக ஊடுருவிச் சென்று தாக்குதல் மேற்கொண்டால் அவர்களுக்குப் பாரிய இழப்புக்களைத் தங்களால் ஏற்படுத்த முடியும் என எண்ணியிருந்த வேளையில், எஸ்.ஏ.எஸ். படையணியினர் அங்கு சென்று, அவர்களுக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி, எதுவும் தங்களால் முடியும் என்பதை உறுதிப்படுத்தினர்.

எதிரியின் பாசறைகளிலேயே அவர்களைக் கொல்ல வேண்டும் என்று எண்ணிய எஸ்.ஏ.எஸ். படையணி ஒரு கடினமான பணியை மேற்கொண்டது. பராதுருப்புக்கள் நேரடியாக பாரசூட் மூலம் மரநுனிகளின் மேல் இறங்கி, பாரசூட்களை மரத்தின் நுனியில் மாட்டிவிட்டு, கயிற்றின் துணையுடன் கீழிறங்கி எதிரியை அழிக்கவேண்டுமென்பதே அத்திட்டமாகவிருந்தது. தற்கொலைக்கொப்பான இந்நடவடிக்கையில் ஈடுபட்டு, தங்கள் திட்டத்தைத் திறம்பட நிறைவேற்றும் பயிற்சியின்போது பலர் இறந்துள்ளதை எஸ்.ஏ.எஸ் படையணியினர் 'ஹெரபோர்ட்' தலைமையகத்திலுள்ள கௌரவிக்கப்பட்டுள்ளவர்கள் பட்டியல் எடுத்துக் காட்டும்.

பிரித்தானியாவின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயங்கரமான கெரில்லாக்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் தங்களால் ஈடுகொடுக்க முடியாதெனவும், தங்கள் சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்துவிட்டதெனவும் கருதி அந்நாடுகளிலிருந்து கௌரவமாக வெளியேற விரும்பினர். 1963 முதல் 1967வரை எகிப்திய இராணுவ உதவியுடன் குடியரசுக்காருவோர் ஆட்சியாளருக்கெதிராக யெமனில் நடந்த போரில் அங்குள்ள எஸ்.ஏ.எஸ். படையினர் பிரித்தானிய அரசுக்கு ஆதரவான அரசகுடும்ப ஆட்சியாளருக்கே ஆதரவளித்தனர். இவர்களுடைய இந்த ஆதரவு பிரித்தானிய நலன்களைக் காப்பதற்கு உதவியாகவிருந்தபோதிலும் இது வெளியுலகத்துக்குத் தெரியவருவது பிரித்தானியாவின் நலன்களுக்குக் குந்தகத்தையே விளைவிக்கும். ஆகையால் அதிலீடுபட்டவர்கள் கைக்கூலிகள் என பிரித்தானிய அரசு கூறியது. எஸ்.ஏ.எஸ். படையணியினர் இதில் ஈடுபட்டனர் என்பதை மறைப்பதற்காகவே இப்படிக் கூறப்பட்டது.

எஸ்.ஏ.எஸ். சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் இற்றைவரை மறுத்துக்கொண்டே வரமுடிகிறது. இப்படையணிக்குத் தேவைப்படுவோர் தேவை ஏற்படும்போதுமட்டும் மற்றப் படையணிகளிலிருந்து இதில் சேர விரும்புவோரில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு, அவர்களது பணி முடிந்த பின்பு இவர்கள் தங்கள் படையணிக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுவிடுவதால் இவர்களது ஈடுபாட்டை மறுப்பது அரசாங்கத்துக்கு இலகுவாகவுள்ளது. அவர்களின் பணி முடிந்த ஒருசில மணி நேரத்தில் அவர்களை அவர்களது பழைய அணிக்கு அனுப்பிவிட்டு எஸ்.ஏ.எஸ். சம்பந்தப்படவில்லை என சுலபமாக மறுத்துவிட முடியும்.

சாதாரண இராணுவம் போலல்லாது இரகசியமாக இயங்குவதற்கு இது இவர்களுக்கு உதவியாகவிருக்கின்றது. கடந்த இருபது வருடகாலமாகப் பிரித்தானியாவுக்கும், ஐரிஷ் குடியரசுப் படைக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தி வரும் வட அயர்லாந்தில் நடக்கும் யுத்தத்தில் எஸ்.ஏ.எஸ். படையணியினரின் ஈடுபாட்டைப் பிரித்தானியா மறுத்துவருவது இவர்களைப் பற்றிய இரகசியம் எவ்வளவு தூரம் காப்பாற்றப்பட்டு வருகின்றது என்பதைக் காட்டுகின்றது. அல்ஸ்ரரில் நடக்கும் போரில் எஸ்.ஏ.எஸ். படையணியினரின் பங்கு சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகின்றது.

> பிரித்தானியாவில் இயங்கும் எஸ்.ஏ.எஸ். ஒரு இரகசிய இராணுவ அமைப்பாகும். பிரிட்டிஷின் பலவெற்றிக்குக் காரணமாக இந்த இரகசியஇராணுவஅமைப்புஇருந்தது. பிரிட்டன் அரசாங்கம்நேரடியாக இராணுவ உதவி வழங்க முடியாத நாடுகளுக்கு இந்த அமைப்பின் மூலம் உதவிகளை வழங்குவது வழமையாகும். இவ்வரிசையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆலோசனையும், பயிற்சியும் இவ்வியக்கத்தினால் 1984 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டது. இவர்களின் 'எங்களை வெல்ல யார் துணிவர்?'' என்ற சித்தாந்தத்திற்கு விடுதலைப் புலிகள் சவாலாக விளங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(7-ஆம் பக்கம் பார்க்க)

## ஊசியில்லாத அக்குபஞ்சர்

கண்ணின் பார்வைக் குறைபாடு மற்றும் கண்ணில் ஏற்படும் கோளாறுகளை மின்னதிர்வுகள் மூலம் குணப்படுத்த புதியதோர் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; கையடக்கமானதும் மின்கலங்களின் சக்தியால் இயங்குவதுமான இக்கருவி கண்ணின் 12 முக்கிய இடங்களில் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

தாய்வானைச் சேர்ந்த இதன் கண்டுபிடிப்பாளர் சிகிச்சைக்கான காலநிர்ணயம் இக்கருவியின் தன்மையைப் பொறுத்தது என்கிறார்; இம்முறை ஊசியில்லாத அக்குபஞ்சர் என சொல்கிறார்; இதுவரை 600 நோயாளர்கள் பூரணகுணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கிறார்.

## எங்களை வெல்ல

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1969இல் ஜரிஷ் குடியரசுக் கூடாக வட அயர்லாந்துக்கு ஆயுதங்களைக் கடத்திச்சென்றவர்கள் மீது இவர்கள் நடத்திய தாக்குதலே முதன்முறையாக மறுக்கப்பட்ட சம்பவமாகும். இந்தச் செய்தி வெளியுலகுக்குத் தெரிந்ததும் அன்றைய பிரதம மந்திரியான ஹறோல்ட் வில்சன் இதனை மறுத்தார். கடந்த இருபது வருட காலமாக இவர்களைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வருவது இவர்கள் அங்கு இருப்பதைச் சுட்டிக்காட்டிய போதிலும் இவர்கள் இராணுவப் பிரிவோடு இணைக்கப்பட்டிருந்தனர். பிரித்தானியப் பிரதமர் பொய்கூறவில்லை. அவர் இந்த மறைமுக செயற்பாடுகள் பற்றியும் அதன் இரகசிய தன்மை பற்றியும் விபரிக்கவில்லை.

அல்ஸ்ரர் போர் நடந்த மூன்று வருடங்களுக்குப் பின்னர்தான் எஸ். ஏ எஸ் படையணியினரின் செயற்பாடு எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என அறியமுடிந்தது. பயங்கரவாதம் தான் உலகத்தில் ஆதிக்கம் செலுத்தப்போகிறதென்று உலகத் தலைவர்கள் அஞ்சினார்கள். அரசாங்கங்களுக்கு இதை எதிர்கொள்ளும் சக்தியுண்டா?

மியூனிக் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின்போது ஒரு குற்றமற்ற இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னரே, அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கும் பணியை எஸ். ஏ. எஸ். படையணியினரிடம் ஒப்படைத்தது. மற்றவர்களாலும் அடக்க முடியாததும், வெல்ல முடியாததுமான பணிகளில் ஈடுபடுவதற்காக இவர்கள் எந்தநோக்கத்திலும், எந்த இடத்திலும் அழைக்கப்பட்டனர். ஜரிஷ் குடியரசுப் படையினர் பல பிரித்தானிய துருப்புக்களை அழித்து வெற்றிகொண்ட அல்ஸரிலுள்ள அர்மா என்னும் இடத்துக்கு எஸ் ஏ.எஸ். படையணியினர் மீண்டும் 1976இல் நேரடியாக அனுப்பப்பட்டனர். இவர்கள் சென்ற ஐந்து மாத மறைமுக நடவடிக்கையில் மறைந்திருந்த அல்லது சிறையிலிருந்த பதினொரு ஜரிஷ் குடியரசுப்படைத் தலைவர்கள் இறந்தார்கள். இதற்குப் பொறுப்பாகவிருந்த எஸ். ஏ. எஸ் படையணியினரின் மதிப்பு மேலும் உயர்ந்தது.

இதைத் தொடர்ந்து எங்கெல்லாம் குழப்பங்கள் ஏற்பட்டதோ அங்கெல்லாம் இவர்கள் சென்று அக்குழப்பங்களை அடக்கினர். 1973இல் 'குயின் எலிசபெத் 2' கப்பலில் குறிப்பிட்ட வேளையில் வெடிக்கும் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன எனச் செய்தி கிட்டியதும் அக்கப்பலிலுள்ள குண்டுகளை அகற்றுவதற்காக இவர்கள் ஹெலிகொப்டரிலிருந்து சமுத்திரத்திலுள் குதித்து அதில் ஏறினர்.

1977இல் ஒல்லாந்தில் தென் மொலுக்கப் பயங்கரவாதிகள் ஒரு புகையிரதத்தைக் கைப்பற்றியபோது, அந்த மீட்புப் பணியிலிருந்த ஒல்லாந்தப் படையினருக்குதவியாக ஒரு எஸ். ஏ. எஸ் படையணி அனுப்பப்பட்டது.

அதே வருடம் ஒக்டோபர் மாதத்தில் சோமாலியாவிலுள்ள மொகடிஷ் என்னுமிடத்தில் கடத்திச் செல்லப்பட்ட ஜேர்மனிய 'லுப்தன்சா ஜெட்' விமானத்தை மீட்பதற்காகச் செல்லும் ஜேர்மனிய பயங்கரவாத எதிர்ப்பு அணிக்கு (GsGa) தலைமை தாங்கிச் செல்வதற்காகப் பிரித்தானியாவிலிருந்து கப்டன் அலிஸ்ரர் மொறிசலும், சார்ஜண்ட் பரிடேனிசும் சென்றார்கள். பணயம் வைத்திருக்கப்பட்ட அனைவரும் எவ்விதகாயங்களுமின்றி மீட்கப்பட்டனர். 1980 இல் லண்டன் ஈரானிய தூதரகச் சுற்றிவளைப்பில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரை மாத்திரம் இழந்து மற்றைய யாவரையும் மீட்டெடுத்த திரச்செயல் உலக மக்களின் நன்மதிப்பை இவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தது. 1982இல் போக்லாண்ட் யுத்தத்தில் மறைந்திருந்து தீவிர தாக்குதலை நடத்தினர். 1984இல் லிபிய தூதரகச் சுற்றிவளைப்பின்போது சமரசப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக இருபத்திநான்கு மணிநேரமும் தயார் நிலையிலிருந்தனர்; 1988இல் ஜிப்ரால்டரில் குண்டு வைப்பதற்கான சதியில் ஈடுபட்டபோது மூன்று ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை இவர்களது அணி கொன்றது. இந்நடவடிக்கையால் கோபமடைந்த ஜரிஷ் குடியரசுவாதிகளும், அவர்களது ஆதரவாளர்களும் இக்கொலைகளை அரசாங்கமே செய்ததாகக் குறைகூறினர். செப்டம்பரில் நடந்த விசாரணை இக்கொலைகள் சட்டபூர்வமானவை எனக் கூறியது.

பிரித்தானியாவின் மூலைமுடுக்குகளிலுள்ள பொலிசாரும், இராணுவ அதிகாரிகளும், உலகிலுள்ள பல அதிகாரிகளும் இவர்கள் இரகசியமாகக் கூடுகின்ற கட்டடங்களுக்கும், சுப்பற்றளங்களுக்கும் சென்று சாதாரண வீடுகள் தொடக்கம் பெரும் கப்பல்கள் வரை எதிரிகளால் தாக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற இவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்த்துள்ளார்கள். பிரித்தானியாவிலுள்ள ஒவ்வொரு விமானத்தளங்களிலுள்ள எல்லா விதமானபயணிகள் விமானங்களையும் அணு உலைகளையும், அரசாங்கத் திணைக்களங்களையும் தேவை ஏற்படின் அதிரடி நடவடிக்கைகள் மூலம் பாதுகாக்கும் திட்டங்கள் எஸ். ஏ. எஸ். படையணியினரிடம் உண்டு. இவர்கள் எங்கே ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள் பெயர் என்ன என்ற விபரங்களை வெளியிடாது இன்னமும் இரகசியமாக வைத்திருக்கவே அரசாங்கம் விரும்புகின்றது.

1985இல் ஈரானியத் தூதரகம் சுற்றிவளைக்கப்பட்டபோது மீட்புப் பணியில் ஈடுபடவிருந்த எஸ்.ஏ.எஸ்.படையணியினரை 'செக்கி இரா

(7ஆம் பக்கம் பார்க்க)

உலகம் முழுவதுக்குமான

DHL WORLDWIDE EXPRESS

துரித
தபால் சேவையை
நாம் நடாத்திவருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்

DHL INTERNATIONAL
C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S. Road, JAFFNA.

(B-2818)

COMPLAN®
காம்ப்ளான்®

இழந்த ஊட்டத்தை பூர்த்திசெய்ய தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

3 சுவைகளிலே கிடைக்கிறது.


திட்டமிட்ட பரிபூரண உணவு "காம்ப்ளான்"

குழந்தைகள்
கர்ப்பிணிகள்
முதியோர் ] அனைவருக்குமானது.

GLAXO (Ceylon) Ltd.
P.O. Box 1653, Colombo.

(R-1549)

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
03 - 10 - 1972

வீரமரணம்
19 - 07 - 1990

### வீரவேங்கை மேகன்
(சண்முகம் மனோகரன்)


19-07-1990 அன்று ஆனையிறவு குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்.

மேகன் வீதி,
குமரபுரம்,
பரந்தன்.

குடும்பத்தினரும்,
உறவினர், நண்பர்களும்.

(R-1547)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். துஷ்யந்தன் (போண்டா)
(சிவயோகநாதன் பார்த்திபன்)

மண்ணில் மைந்தனாய்: 08 - 01 - 1973

மாவீரனாய்: 19 - 07 - 1990

"நீ இங்கு இல்லை என்பது - ஒரு
கசப்பான நிஜம்!
நீ இங்கு இருக்கிறாய் என்பது – ஒரு
பொய்யான பிரமை!
எங்கள் ஆகாயத்தை விட்டு அபகரிக்கப்பட்ட
நட்சத்திரம் நீ
நாங்கள் ஞாபகத்தின் பக்கங்களைப் புரட்டிப்
பார்க்கவில்லை – ஏனெனில்
எங்கள் மனங்களில் அவை
மனனஞ் செய்யப்பட்டுள்ளன
எம்மால் அழ முடியவில்லை - ஏனெனில்
இது அழுகைக்கும் அப்பாற்பட்ட சோகம்
உன் நினைவுகள் எங்கள் உணர்வுகள்"

19-07-90இல் குறிஞ்சாத்தீவில் தரையிறங்கிய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார். இவருடன் வீரமரணமடைந்த ஏனைய வேங்கைகளையும் இந்தநாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கிறோம்

பருத்தித்துறை.

-குடும்பத்தினர்.

(R-1548)

# புலிகளின் ஆனையிறவு முகாம் தாக்குதல்
# ராணுவ மேலாதிக்க கொள்கைக்கு இறுதி அடி

தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை நடைபெற்றிராத பெரும் போர் ஆனையிறவில் நடைபெற்று வருகின்றது. சிறிலங்காவின் முப்படைகளுக்கும் எதிராக விடுதலைப் புலிகள் பெரும் போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### கேந்திர முக்கியத்துவம்

யாழ் குடாநாட்டின் வாயில் எனக் கருதப்படும் ஆனையிறவு சுமார் அரைமைல் நீளமான தரைப்போதி ஒன்றினால் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கப்படுகின்றது. அந்நியரின் ஆட்சிக் காலத்திலேயே இப்பகுதியின் கேந்திர முக்கியத்துவம் உணரப்பட்டு 1760இல் டச்சுக்காரரினால் ஒரு காவற்கோட்டை ஆனையிறவில் அமைக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயரும் அதனைப் பயன்படுத்தினர்.

1961ஆம் ஆண்டு வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்துடன் நிரந்தர இராணுவமுகாம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டது. பின்னர் தமிழர் தேசிய இனப் போராட்டம் வளர்ச்சியடைய முகாமும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வட பகுதியில் உள்ள முக்கிய முகாம்களில் ஒன்றாக இம்முகாம் விஸ்தரிக்கப்பட்டது.

கேந்திரரீதியான முக்கியத்துவம் மட்டுமன்றி புவியியல் ரீதியாக மிகவும் பாதுகாப்பான இடத்தில் இம்முகாம் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. ஒரு புறம் பரப்பு கடலும் மறுபுறம் சதுப்புநிலமும், பரட்டைக் காடுகளையும் கொண்ட இம்முகாம் எளிதில் நெருங்கவோ அன்றி தாக்குதல் நடத்தவோ சாத்தியமற்றதாக மிகவும் பாதுகாப்பானதாக அமைந்துள்ளது.

### முகாமின் விஸ்தீரணம்

தற்போதைய ஆனையிறவு இராணுவ முகாம் மூன்று பிரதான பகுதிகளை உள்ளடக்கியது. ஒன்று முன்னரே தளமுகாமாக இருந்த ஆனையிறவு வாடிவீடு, டச்சுக் காவற் கோட்டை என்பனவற்றை உள்ளடக்கிய பகுதி. இரண்டாவது தளமுகாமிற்கு முன்பாக யாழ்-கண்டி பிரதான வீதிக்கு மேற்குப் பக்கமாகவுள்ள குறிஞ்சாத்தீவுப் பகுதி குடியிருப்புகளை உள்ளடக்கிய பகுதி. மூன்றாவது யாழ் குடாக்கடல் ஏரிக்குத் தெற்காக அமைந்துள்ள ஆனையிறவு பெரிய உப்பளத்தையும் சூழவுள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதி. இம்மூன்றாவது பகுதி மட்டுமே முப்பத்தைந்து ஏக்கர் பரப்பில் அமைந்து முப்பது பெரும் கட்டடங்களை (உப்புக் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான களஞ்சியங்கள் அலுவலகங்கள், குடிமனைகள்) உள்ளடக்கியதாகும். இம்மூன்றாம் பகுதி கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து இராணுவம் வெளியேறிய போது அமைக்கப்பட்டதாகும். இம்மூன்று பிரதான பகுதியையும் உள்ளடக்கிய ஆனையிறவு முகாம் சுமார் நாலு மைல் சுற்றளவைக் கொண்டதாகும். சுமார் ஆயிரம் சிறிலங்கா இராணுவத்தினரையும் பல உலங்கு வானூர்தி இறங்கு தளங்களையும் கொண்டதாகும்.

### எதிர்பார்த்த மோதல்

இப்பரந்த இராணுவமுகாம் மீது கடந்த வாரம் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். ஆனால் இம் முகாம் மீதான தாக்குதலுக்குப் பல நாட்களாகவே புலிகளினால் பரந்த அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் முன்கூட்டியே அறிந்திருந்தன. இதற்கான பாதுகாப்பு முன் ஏற்பாடுகளையும் சிறிலங்கா பாதுகாப்பு படையினர் மேற்கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக இது ஒரு அதிரடித் தாக்குதலோ அன்றி திடீர் தாக்குதலோ அல்ல. விடுதலைப்புலிகளும் சிறிலங்காவின் முப்படைகளும் மோதும் ஒரு பெரும் சமராக இருக்கும் என முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவர் கூறியது போன்று ஆனையிறவு முகாம் சுலபமாக எமது கையில் விழுந்துவிடும் என நாம் எண்ணவுமில்லை. இலகுவில் முகாமைப் பறிகொடுத்துவிடுவதற்கு சிறிலங்கா இராணுவம் அந்தளவிற்கு முட்டாள்களும் அல்ல என்றார்.

ஆனால், மோதல் ஆரம்பித்த போது சிறிலங்காவின் கணக்கில் சில தவறுகள் ஏற்பட்டிருந்தன என்பது தெரியவந்தது. விடுதலைப் புலிகள் இவ்வளவு ஆக்ரோஷமான தாக்குதல்களை முகாம் மீது தொடர்ச்சியாக மேற்கொள்வார்கள் என சிறிலங்கா இராணுவத் தரப்பு எண்ணவில்லைப் போலத் தெரிகின்றது.

ஆனையிறவு இராணுவமுகாமைப் புலிகள் தாக்குவதற்குரிய புவியியல் சூழ்நிலை இல்லை, ஆகையினால் பாதுகாப்பானது என்ற கருத்திலேயே இம்முகாம் விஸ்தரிக்கப்பட்டும், பலப்படுத்தப்பட்டும் இருந்தது. ஆனால் புலிகளின் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முகாம் புலிகளின் கையில் வீழ்ந்துவிடும் என்ற அச்சம் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களைப் பற்றிக் கொண்டது.

பி.பி.ஸி. தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டது போன்று, ஆனையிறவு இராணுவ முகாம் பாதுகாப்புப் படை அதிகாரிகள் குறிப்பிடுவது போன்று பாதுகாப்புடன் இல்லை. அவ்வாறு பாதுகாப்புடன் இருப்பதாயின் சிறிலங்கா என்றுமில்லாதவாறு ஒரு பெரிய படை இறக்கத்தை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் மேற்கொண்டிருக்கத் தேவையில்லை.

### விமானப்படை செயற்பாட்டிற்கு தடங்கல்

இம்முறை விடுதலைப் புலிகளின் தாக்குதல் சிறிலங்கா விமானப்படையின் செயற்பாட்டை வெகுவாகக் கட்டுப்படுத்தியது. ஆனையிறவு மோதலிலும் விமானப்படை பெரும் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாயினும் சிலாவத்துறை மோதல் போன்றோ அன்றி மண்டைதீவு மோதல் போன்றோ புலிகளின் இலக்குகளை நெருங்கிவர சிறிலங்கா விமானப்படையினரால் முடியவில்லை.

விமானப் படையின் இச்செயற்பாடு கட்டுப்படுத்தப்பட்டமையே ஆனையிறவு முகாம் புலிகளிடம் விழுந்துவிடும் என்ற அச்சத்தை சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஏற்படுத்தின. இதைத் தொடர்ந்தே சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் பெரும் படை இறக்கம் ஒன்றைச் செய்தன.

### பெரும் தரையிறக்கம்

கடற்படையின் உதவியுடன் தரையிறக்கப்பட்ட இவ் இராணுவ அணியில் 3000 வரையிலான இராணுவத்தினரும் அவர்களின் இராணுவத் தளபாடங்களும் உள்ளடங்கியுள்ளன. தரையிறக்கப்பட்ட இவ் அணி இலகுக் காலாட்படைத் தலைமையகத்தைச் சேர்ந்தவர்களாகும். இதில் சிறிலங்காவின் அதிவிசேட முன்னணிக் காலாட் படையான கஜபாகு படைப் பிரிவின் முதலாம், இரண்டாம் படைப் பிரிவுகளும், சிங்க ரெஜிமென்டின் மூன்றாவது படைப்பிரிவும், இலகு காலாட்படைப் பிரிவின் மூன்றாவது படைப்பிரிவும் அடங்கியுள்ளன.

சிறிலங்கா இராணுவம் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவு முகாம் பகுதியில் இருந்த பிரதான போர் முனை கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதிக்கு மாறியது. அதாவது இரண்டாவது போர்முனையும் முக்கிய போர் முனையாகத் திறக்கப்பட்டது. இப்படையிறக்கம் ஒன்று மேற்கொண்ட போதே இரண்டாவது போர் முனை ஒன்று திறக்கப்படும் என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் எதிர்



பார்த்தன. ஆனால் இப்போர் முனை இவ்வளவு கடுமையானதாக இருக்கும் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கவில்லை. இதனை சிறிலங்கா இராணுவ அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருப்பதாக சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை இரண்டாவது போர் முனை ஒன்று திறக்கப்படும் என்றும் பெரும்போர் ஒன்று மூளலாம் என்பதை விடுதலைப் புலிகள் முன்னரே கணிப்பீடு செய்திருந்தனர். இதன் காரணத்தினாலேயே தரையிறக்கப்பட்ட விசேட இராணுவ அணி தனது விருப்பத்திற்கேற்றவாறு நகர்வுகளை மேற்கொள்ள முடியாமல் போனதும் பெரும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டதும் ஆகும். சிலாவத்துறை மோதலைப் போன்றோ அன்றி கிளிநொச்சி மோதல் போன்றோ யுத்த நிலைமை சிறிலங்கா இராணுவத்திற்கு சாதகமாக இருக்கவில்லை.

இம்மோதல் விடுதலைப் புலிகளைப் பொறுத்து குறிப்பிடும்படியான உயிர்ச்சேதத்தை ஏற்படுத்திய மோதலாக இருப்பினும் சிறிலங்காவின் முப்படைகளின் ஒருங்கிணைந்த செயற்பாடு இல்லாத போனால் சிறிலங்கா இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து மிக விரைவில் வெளியேற்றப்படும் என்பதை உணர்த்தியது. அதாவது கடந்த காலத்தைப் போன்று இராணுவமும் விமானப்படையும் இணைந்து மட்டும் இராணுவ முகாம்களையோ இராணுவ அணிகளின் நகர்ச்சிகளையோ பாதுகாக்க முடியும் என்ற நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளியை இம்மோதல் வைத்தது.

### அரசியல் முக்கியத்துவம்

ஆனையிறவில் நடைபெறும் மோதல் முன்னமே குறிப்பிட்டது போன்று இராணுவ ரீதியாக மட்டும் முக்கியம் வாய்ந்ததல்ல. அரசியல் ரீதியாகவும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. இம்மோதல், இராணுவ ரீதியில் ஒரு முகாம் பகுதியில் நிகழும் பெரும் மோதலாக இருப்பினும் சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் கொலையுடனும், இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியின் கொலையுடனும், கொழும்பில் இடம்பெற்ற சிறிலங்கா முப்படைகளின் நடவடிக்கைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புக்களுடனும், அவற்றினால் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றங்களுடனும் தொடர்புபடுத்தியே அரசியல் ரீதியில் அதன் முக்கியத்துவம் உணரப்படும்.

மேற்குறிப்பிட்ட மூன்று குண்டு வெடிப்புக்களுக்கும் விடுதலைப்புலிகளே காரணம் என இரு நாட்டு அரசாங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், விடுதலைப்புலிகள் தமக்கும் குண்டு வெடிப்புக்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனத் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

> இதுவரை நடந்த போர்களில் சிறிலங்கா விமானப்படை பெற்ற முக்கியத்துவம் இப்போரில் மழுங்கடிக்கப்பட்டது. புலிகளின் இலக்குகளை விமானப்படையினரால் நெருங்க முடியவில்லை. இதனால் வடக்கில் முப்படைகளும் இணைந்தால் அன்றி முகாம்களின் பாதுகாப்பு, இராணுவத்தின் நகர்ச்சி என்பன கேள்விக்குரியதாகியது.

அதேவேளை குண்டு வெடிப்புகள் ஏற்படுத்திய அரசியல் ரீதியான தாக்கங்களின் மத்தியிலேயே ஆனையிறவு மோதல் ஆரம்பமானது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. குண்டு வெடிப்புக்கள் இடம்பெறுவதற்கு முன்னர் இராணுவ ரீதியான மேலாதிக்கத்தைப் பெற்றுவிட முனைந்து தோல்வி அடைந்த சிறிலங்கா அரசாங்கம் குண்டு வெடிப்புகளை தொடர்ந்து மீண்டும் இராணுவ நடவடிக்கையில் நம்பிக்கை வைத்து நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தமக்கு சாதகமாகும் என நம்பியது.

இதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டவையே வன்னி விக்கிரம ஒன்று, வன்னி விக்கிரம இரண்டு இராணுவ நடவடிக்கைகள் ஆகும். ஆனால் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. எதிர்மாறாக தோல்விகளையே இராணுவ நடவடிக்கைகள் கொடுத்தன.

ஆனால், சிறிலங்கா எண்ணியது போன்று இந்தியா வன்னிவிக்கிரம ஒன்று, வன்னிவிக்கிரம இரண்டு, ஆனையிறவு மோதல் ஆகியவற்றில் சிறிலங்காவிற்கு ஆதரவான போக்கையே கடைப்பிடித்து வந்தது. சிறிலங்காவின் இராணுவ வெற்றியை இந்தியாவும் ஆவலுடன் எதிர்பார்த்தது போல தெரிகின்றது. ஆனால் நிலைமை அவ்வாறு அமையவில்லை.

விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை வற்புறுத்திவரினும், இராணுவ நடவடிக்கைக்கு எதிரான பலமான எதிர் நடவடிக்கைகளை எடுத்தனர் விடுதலைப்புலிகள். தற்பொழுது ஆனையிறவில் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையானது சிறிலங்கா அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு முற்படுத்தும் ஒரு தாக்குதல் என சில அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் இது முழுமையான ஏற்புடைய கருத்தெனக் கொள்வதற்கில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்தியாவில் போராளிகளுக்கு அடைக்கலம் கிடைக்கிறது. இதனால் தான் தமிழீழப் போராட்டம் தீவிரமாயுள்ளது என்ற சிறிலங்காவின் நீண்டகால குற்றச்சாட்டைப் போக்கவும், தமிழீழப் போராட்டம் தனது சொந்தக்காலிலேயே நடைபெறுகின்றது, இராணுவ ரீதியான வெற்றிகள் என்பது இனிமேல் சாத்தியப்படப் போவதில்லை என்பதையும் வலியுறுத்தவே ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்துள்ளார்கள் என்பதே பொருத்தப்பாடு உடையது போல தெரிகின்றது.

எது எவ்வாறிருப்பினும் ஆனையிறவு மோதலானது விடுதலைப்புலிகள் எந்தவித அழுத்தத்திற்கும் உள்ளாகாமல் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தும் சக்தியைப் பெற்றுள்ளார்கள் என்பதை நிரூபிக்கின்றது.

இதன் மூலம் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் விடுதலைப்புலிகள் ஒரு பலம் பொருந்திய சக்தி என்பது மட்டுமல்ல தமிழீழத்தின் ஆட்சிச் சக்தி என்பதையும் நிரூபித்துள்ளார்கள். அதனை வலியுறுத்துமாப்போல் மக்களும் போராட்டத்திற்குப் பேராதரவு வழங்கி வருகின்றார்கள்.

- ஜெயா -

## வவுனியாவரை குண்டுச் சத்தம்

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் ஏவப்படும் குண்டுகள் வெடிக்கும் சத்தம் வவுனியா வரை கேட்கின்றது. இரவு வேளைகளில் மேற்படி குண்டுகள் வெடிக்கும் சத்தம் தொடர்ச்சியாகக் கேட்கின்றது. (நி)

### எங்களை வெல்ல...

(5ம் பக்கத்தில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி 6ம் பக்கத்தில் வெளிவந்துள்ளது; மிகுதி இப்பக்கத்தில் வெளியாகிறது)

ணுவ விடுதிக்கு' அழைத்து அதன் தளபதியான கபரின் மைக்ரோஸ், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் ஒரு சீட்டுக்கட்டை அவர்களுக்கு எடுத்துக்காட்டி 'இது பெரியவர்கள் விளையாடும் ஒரு விளையாட்டு' இலக்கமிடப்பட்டுள்ள சீட்டெல்லாம் சமாதானமாக வாழவிரும்பும் மக்களைக் குறிக்கின்றன. 'K' எனக் குறிக்கப்பட்டுள்ள சீட்டு பயங்கரவாதிகளைக் குறிக்கின்றது. 'Q' எனக் குறிக்கப்பட்டுள்ள சீட்டு, எங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட மகாராணியைக் குறிக்கின்றது. இதுதான் 'ஜோக்கர்', இது உங்களைக் குறிக்கின்றது. 'K' என்ற பயங்கரவாத சீட்டு குறிகளில் தான் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

## சோவியத் பொருளாதார சீர்கேடு

# தடுப்பதற்கு மேற்குலகின் 6 அம்சத்திட்டம்

(லண்டன்)

ஏழு கைத்தொழில் மய நாடுகளின் மாநாட்டில் சோவியத் யூனியனையும் உலக பொருளாதாரத்தில் ஒருங்கிணைத்துக்கொள்வதற்கு உறுதியான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. சோவியத் யூனியனின் பொருளாதாரம் மேலும் மோசமடைவதைத் தடுக்க மேற்குலக நாடுகளின் ஆறு அம்ச உதவித் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

சோவியத் தலைவருக்கும், கைத்தொழில் மய நாடுகளின் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புப்பற்றிப் பிரிட்டன் பிரதமர் ஜேன் மேயர் கருத்து வெளியீட்டின் போது ஆறு அம்சத் திட்டத்தை விபரித்தார்.

இத்திட்டத்தின்படி சர்வதேச நாணய நிதியத்திலும், உலகவங்கியிலும் சோவியத் யூனியனுக்கு விசேட கூட்டு உறுப்புரிமை அந்தஸ்து வழங்கப்படவுள்ளது. சோவியத் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் இணைக்க எடுக்கப்பட்ட கண்டிப்பான நடவடிக்கையிது என ஜேன் மேயர் விபரித்தார்.

சோவியத்யூனியனின் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் தற்போதைய நிலையில் நிதி உதவி வழங்குவதற்கான சந்தர்ப்பம் இன்றும் ஏற்படவில்லை. உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இது தெளிவாக்காட்டுவதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்,

சோவியத் யூனியன் தனது சந்தைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய சொந்த இயற்கை வளங்களையும் மனித வளங்களையும் ஈடுபடுத்துவது அவசியமென ஜேன் மேயர் மேலும் குறிப்பிட்டார்.

சோவியத் யூனியன் தனது நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக சுமார் ஒரு கோடி டாலர் நிதியுதவி வழங்குவது பற்றியும் தலைவர்கள் ஆராய்ந்துள்ளனர்,

# அணுவாயுதங்கள் குறைக்க புஷ் - கொர்பி இணக்கம்

(லண்டன்)

கண்டங்களுக்கிடையேயான அணு ஆயுதங்களை பெருமளவில் குறைப்புச் செய்யும் உடன்படிக்கையில் கையெழுத்திட சோவியத் ஜனாதிபதி கொர்பச் சேவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இம்மாத பிற்பகுதியில் மொஸ்கோ உச்சி நிலைக் கூட்டத்தில் சந்திக்கும் போது இந்த உடன்பாட்டில் கையெழுத்திடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த உடன்படிக்கை குறித்து கருத்து வெளியிட்ட சோவியத் ஜனாதிபதி கொர்பச் சேவ் 'உடன்படிக்கை இரு நாடுகளுக்கும் பொதுவான வெற்றி என்றும் அணு ஆயுத போர் ஏற்படுவதான அச்சத்திலிருந்து உலக மக்கள் விலகியிருப்பதாகவும்' அவர் தெரிவித்தார்

---

முள்ளையில்

தலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இராணுவத்தினர் பின்வாங்கித் தமது நிலைகளுக்குச் சென்று விட்டனர்.

---

பதிவு

எஸ். செல்லச்சாமி விடுத்த வேண்டுகோளையடுத்து கால எல்லையை நீடித்ததாக அவர் தெரிவித்தார், அத்துடன் தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

ஜனவரி 1 ஆம் திகதிக்குப் பிறகு வீடுகளை வாடகைக்குக் கொடுத்த உரிமையாளர்கள் வீட்டின் ஒரு பகுதியினை வாடகைக்குக் கொடுத்தவர்கள் அல்லது அறையொன்றினை வாடகைக்குக்கொடுத்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் அதன் விபரங்களைத் தெரிவிக்குமாறும் சிறில் ரணதுங்கா கேட்டுள்ளார்.

---

## ஒத்திவைப்பு

(குருநகர்)

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட, எல்லே, தாச்சிப் போட்டிகள் பின்போடப்பட்டுள்ளன.

மேற்படி விளையாட்டுக்களின் சுற்றுப்போட்டிகள் இவ்வாரத்திலும், எதிர் வாரங்களிலும் நடைபெற இருந்தன.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக மறு அறிவித்தல் வரை மேற்படி போட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக விளையாட்டுக்குழுச் செயலாளர் கி. கி. நவரெட்ணம் தெரிவித்தார்.

(24) (21)

---

ஆஸ்பத்திரி

வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின்படி காவலாளிகள் சேவையிலிருந்து ஓய்வு பெற விரும்பினால் அதற்கு விண்ணப்பிக்கலாம். பணிமனையிலுள்ள வேறு சிற்றூழியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது வட-கிழக்கு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள வேறு சுகாதார பணிமனைகளுக்கு மாற்றம் கோரி விண்ணப்பிக்கலாம். இவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து விருப்பத்தை அறிவிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் காவலாளிகள் சேவை தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்படவுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

---

வடபகுதிக்கு

இல்லை என்று யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வடபகுதிக்கான நிவாரண வேலைகள் நிறுத்தப்படவேண்டிய நிலை உருவாகிவருவதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்

தற்சமயம் பொருள்களைத் திருப்பியும் கொண்டுவருவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும், அது வெற்றியளிக்கும் பட்சத்தில் வழமை போல் நிவாரணங்களுக்கு நிவாரணத்தை வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

உணவு மற்றும் மருந்து வகைகளையும் வடபகுதிக்கு அனுப்பி வைப்பது தொடர்பாகக் கொழும்பில் நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசரக் கூட்டம் ஒன்று கூடியது.

---

## கலந்துரையாடல்

தாயக மீட்புப் போரில்காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பதற்கென "பாசறை" பணிமனையில் பெயர் பதிவு செய்த ஆண்கள், பெயர் பதிவு செய்யாத பராமரிக்க விரும்புவோர் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை காலைபத்து மணிக்கு மாலம் பணிமனைக்கு சமூகம்தர விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கூட்டம்

யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரியில், கல்லூரியின் நிரந்தர / பகுதிநேர விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கான கூட்டமொன்று திங்கட்கிழமையன்று 22-07-91) காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளும்படி கல்லூரி நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது

★ ★ ★

யாழ். கலைகலைக்கழக மறுமலர்ச்சிக்கழக அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று (19 - 07 - 91) பி. ப. 4·00 மணிக்கு மறுமலர்ச்சிக் கழகத்தில் நடைபெறவிருப்பதால் கழக அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

★ ★ ★

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத்தின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபையின் ஆட்சிக்குழுக் கூட்டம் 20 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் சமாசத் தலைவர் திரு. செ. சந்தசாமி தலைமையில் நடைபெறும். (24

---

வெற்றிலைக்கேணி

வீச்சு மிக உக்கிரமாக நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது இந்த குண்டுவீச்சு தாக்குதலில் ஆறு குண்டுவீச்சு விமானங்களும், மூன்று அவ்ரோ விமானங்களும் இரண்டு ஹெலிகொப்டர்களும் ஒரே நேரத்தில் பங்குபற்றியதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை ஒரு உலங்குவானூர்தி ஒன்றும், குண்டு வீச்சு விமானம் ஒன்றும் சேதமடைந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

நேற்று முன்தின மோதலில் நான்கு இராணுவ வானங்கள்சேதமானதும் இராணுவத்தினர்பலர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

---

சிவராஜா

களையும், சுபாவின் நான்கு புகைப் படங்களையும் புலனாய்வுக்குழு வெளியிட்டுள்ளது.

இவர்களைப்பற்றிய தகவல்கள் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்றும், தகவல் தருவோருக்கு ரூபா 10 லட்சமும் ரூபா 5 லட்சமும் சன்மானம் வழங்கப்படும் என்றும் புலனாய்வுக்குழு அறிவித்துள்ளது.

---

இராணுவம்

வும், ஆனையிறவு இராணுவ முகாமைக் கைவிடும் ஏதுநிலை எதுவுமில்லை என வலியுறுத்தியதுடன், மேலும்கூடுதலான இராணுவ முகாம்கள் அமைக்கப்படக்கூடும் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை ஆனையிறவை நோக்கி இராணுவத்தினர் எதிர்பார்த்த அளவு முன்னேற முடியவில்லை என்றும், கடுமையான எதிர்ப்பைச் சந்தித்து வருவதாகவும் இறக்கிவிடப்பட்ட இராணுவத்தினரில் சுமார் எட்டில் ஒரு பங்கினர் காயமடைந்து அல்லது கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பி. பி. சி நேற்றிரவு கூறியது.

---

# நவாலியில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, மணலாறு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு நேற்று மக்கள் அஞ்சலி செலுத்தினர்: நித்தியானந்தம் சிவசிதம்பரம் சிவகுமார் சுன்னாகம்), ஆனந்தன் ஜெயதிலக நிசாந்தன் சுன்னாகம்). சுரேஸ் கந்தசாமி ராஜேந்திரம் அரியாலை). சார (கணபதிப்பிள்ளை சிந்திரவேல் மூதூர்), றமேஸ் (சின்னத்துரை சபேசன் அளவெட்டி). இராசலிங்கம் (மகாலிங்கம் ஜெயலிங்கம் மூளாய் சுழிபுரம்), ஆகிய போராளிகளின் புகழுடல்கள் நேற்று நவாலி சென் பீற்றஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் பரா, மகேசாயப்பா, சங்கர், ரஞ்சன் மாஸ்டர் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர் புகழுடல்கள் தகனத்திற்காக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(54)

# தீவகப்பகுதி மக்கள் ஊர்திரும்ப முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதி மக்கள் தமது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் யாழ் நகரில் தங்கியுள்ளனர். இவர்களை அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகிறது

நெடுந்தீவு. அனலைதீவுப் பகுதிகளிலிருந்து கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த பொதுமக்கள் 120 பேரே இவ்வாறு திரும்பிச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர். கடந்த 10 ஆம் திகதி காலை அரசு திடீரென ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்ததைத் தொடர்ந்து இப்பகுதிகளுக்கான போக்கு வரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டன இதனாலேயே இவர்கள் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் இங்கு தங்கியுள்ளனர் தற்போது இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# போலி முகவரிடம் ஏமாற வேண்டாம் என எச்சரிக்கை

(கொழும்பு)

இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பு இருப்பதாக கூறும் போலி முகவர்களிடம் ஏமாற வேண்டாமென கொழும்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜப்பான் இத்தாலி முதலான நாடுகளுக்கு விசா எடுப்பதிலேயே பெரும் கஷ்டம் நிலவுகின்ற இந்த நேரத்தில் இது போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு பெருமளவில் இருக்கிறது என்று கூறும் போலி முகவர்களை நம்ப வேண்டாம் என்று தொழில் அமைச்சினால் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பல்கேரியா, ரோம் முதலான இடங்களுக்கு செல்வதற்காக யூகோஸ்லாவியா எல்லைக்கு கடக்க முற்பட்ட இருபதுபேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உட்பட்டனர் என்றும் இவர்களில் பலர் இலங்கையர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது

---

மாவீரர்க்கு

சனசமூக நிலையத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்

இதன்பின் பூவுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வேலணை சாட்டியிலுள்ள மாவீரர் மயானத்தில நல்லடக்கம் செய்யப்பட்டது. (14)

---

தென்னந்தோப்பு

இராணுவத்தின் தரையிறக்கத்திற்கு உதவியாகக் கடற்படைப் பீரங்கிப் படகுகளில் இருந்தும், விமானப்படை விமானங்களில் இருந்தும் தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே இப்பகுதியில் இருந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான 5 ஏக்கர் தென்னந்தோப்பு எரிந்துசாம்பராகியுள்ளது.

---

முறியடிப்பது

னர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஆனையிறவு இராணுவ முகாம் நோக்கி வெற்றிலைக் கேணிப் பகுதியிலிருந்து வந்து கொண்டிருக்கும் இராணுவத்தினர் ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிப்பதை மட்டும் நோக்கமாகக்கொண்டிருக்கவில்லை புலிகளுடன் முடிந்தவரை போர் நடத்தி அவர்களை வெளியே இழுத்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும்இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## பராமரிப்பதில் ஆசிரிய மாணவர்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தில் காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பதில் கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். விடுமுறையில் வீடு சென்றிருக்கும் ஏனைய ஆசிரிய மாணவர்களையும் உடனடியாகத் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர் ஒன்றியத் தலைவர் திரு இராஜலிங்கம் கேட்டுள்ளார்.

## பிற்போடப்பட்டது

யாழ் மாவட்டத்தில் வட்டவரீதியாக நடைபெறவிருந்த தியாகி திலீபனின் ஞாபார்த்த தட - கள விளையாட்டுப் போட்டிகள் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது

## குப்பைக் கூடைக்குள் வெடி குண்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள சட்டக் கல்லூரி மாணவர் விடுதிவளாகத்திற்குள் நாட்டுக் குண்டு மாதிரியான குண்டு ஒன்று நேற்றுக்காலை வெடித்ததில் ஒரு பெண் பாரிய காயங்களுக்குள்ளானார்.

கடதாசிகளைத் தேடும் பெருட்டுக் குப்பைத் தொட்டியைக் கிளறியபோது இந்தக் குண்டு வெடித்துள்ளது. பிளாஸ்டிக் உறைக்குள் இது வைக்கப்பட்டிருந்தது.

புலிகளுக்கு ஆதரவான குழு இந்தக் குண்டை வைத்திருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.